உ

கடவுள் துணை

# செந்தமிழ்

தொகுதி-கூ.] விரோதிகிருதுஹூ சித்திரைமீ". [பகுதி-சு.

## யசோதரகாவிய ஆராய்ச்சி

(224-ம் பக்கத் தொடர்ச்சி.)

[ஸ்ரீ: டி. எஸ். குப்புஸாமி சாஸ்திரிகள் எழுதியது.]

(2) [illegible] चण्डकर्माणमादिशत् ।
[illegible] सर्वलक्षणसंयुतम् ॥
[illegible] ।
[illegible] ॥
इति [illegible] चण्डकर्मा कृताञ्जलिः ।
[illegible] ॥

இதன் பொருள்:—அரசன்றன் வீரவாளை உறையினின்று உருவினவனாய், சண்டகருமன் என்பானை நோக்கிக் கட்டளையிட்டனன். 'நல்ல இலட்சணம்வாய்ந்த மனிதஜாதியரிருவரைத் தேடிக்கொணர்தி. அவ்விருவரையும் என்கையாற் கொன்று நான் தேவிக்குப் பலிகொடுத்த பின்னரே பட்டினத்துக்குடிகள் தமக்குரிய அவ்வவ் விலங்குகளைக் கொன்று பலியிடக்கடவர்'. அரசன் இவ்வாறு கட்டளையிடவே சண்டகருமன் விரைவினிற்றேடிக்கொணரத் தன்னாட்களை ஆங்காங்குச் செலுத்தினன். தானும் சென்றனன்.

"யானிவ் வாளினின் மக்க ளிரட்டையை
யீன மில்பலி யாக வியற்றிறை
லேனை மானுடர் தாமிவ் விலங்கினி
லான பூசனை யாற்றுத லாற்றென. I. 17.

*

292



வாட லொன்றிலன் மக்க ளிரட்டையை
யீடி லாத வியல்பினி லிவ்வழி
யேட சண்ட கருமதந் தீகென
நாட வோடின னன்னகர் தன்னுளே." I. 18.

(3) "ஸர்வபூதஹிதோ யஸ்து ஸர்வலோகஸுகாவஹ: ।
விஷயஸ்தோ தர்மஸ்த ராஜா ராஜந் ந்ருபதீம் க்ஷிதிம் ॥"

இதன் பொருள்:—அரசனே! யாதோரறமானது எல்லாவுயிர்களுக்கும் இதமானதோ, எல்லா வுலகத்துக்கும் சுகத்தைக் கொடுப்பதோ அத்தகைய நல்லறத்தைக் கைக்கொண்டு நிலமகட்கு வாய்ந்த நல்ல ரசனுவாயாக.

"மறவியின் மயங்கி வையத் துயிர்களை வருத்தஞ் செய்யா
தறவியன் மனத்தை யாகி யாருயிர்க் கருள்ப ரப்பிச்
சிறையன பிறவி போக்குந் திருவற மருவிச் சென்று
நிறைபுக ழுலகங் காத்து நீடுவாழ் கென்று நின்றார்." I. 55.

(4) "ஸூக்ஷ்மாக்ஷம் உக்ரஸ்வரம் அதிமந்தம்
நிகூடகோஶம் பரிஹ்ரஸ்வவக்த்ரம் ।
ஸம்ஶக்திலோமம் ஹ்ரஸ்வவக்த்ரநாஸம்
தீர்காம் ஸிரஸ்யாஸ்து விலம்பிதோஷ்டம் ॥
ஸூக்ஷ்மம் பாண்டவர்ணாயஸ்தம் க்ருஷ்ணம்
உக்ராஸ்ய கேஶிஷு ஹிரண்யரேகம் ।
காகாஸ்யம் காகிஸ்வரேதி நேத்ரம்
உத்வ்ருணக்லேசிதாஸ்ய காகிம் ॥"

இதன் பொருள் :— முகமாதிய வணத்திலும் நெருங்கவியலாத தீய நாற்றம்; முதுகோ பிறவிக் கூன்; உண்டோ இன்றோ வென்று சந்தேகிக்கத் தக்க கண்கள்; மயிருளதோ வென்ற ஐயப்பாட்டுக்கிடமான புருவங்கள்; நெருங்கிய குறுங் கழுத்து; உதிர்ந்துசிதைந்த தலைமயிர்; காக்கைமூக்குப்போன்று கருத்த வாய்; உள்ளும் வெளியுமாய் வரிசைதப்பிய சில சில பற்கள்; யானையின் சிறுநீரிற் றோய்ந்த கைகள்; கண்கள் கொள்ளாவழிப் புண்ணிறைந்த உடல்.

"நரம்புகள் விசித்த மெய்ய னடையினிற் கழுத ணேர்தே
திரங்கிய விரலன் கையன் சிறுமுகன் சினவு சிறிற்
குரங்கினை யனைய கூனன் குழிந்துபுக் கழிந்த கண்ண
னெருங்கலு நிரலு மன்றி நிமிர்ந்துள சிலபல் லென்றாள். I 32.

பூதிகந் தத்தின் மெய்யிற் புண்களும் கண்கள் கொள்ளாச்
சாதியுந் தக்க தன்று லவன்வயிற் றளரு முள்ள
நீதவிர்ந் திட்டு நெஞ்சி னிறையினைச் சிறைசெய் கென்றாள்
கோதவிழ்ந் திட்ட வுள்ளக் குணவதி கொம்ப னாளே." I 33.

(5) "வயோ நவம் ரூபமதீவ ரம்யம்
குலோந்நதிஸ்ச கலாவிசேஷா: ।
யத்ர ப்ரஸந்நோ பகவாநநங்க:
ஸ ஏவ தேவ: ஸகி ஸுந்தரீணாம் ॥
ஸதாகாரவிராஜிதஸ்ய ஸாத்யம்
நிதம்பிநீநாம் நவஸந்தமாஸ: ।
தஸ்யாஸ்தி சேத் கிம் ததோ விசாரை:
கார்யே ச ஸித்தே ந ஹி காரணேஷு ॥"

இதன் பொருள்:—நல்லுருவம் கட்டழகு காளைப்பருவம் நற்குடி என்றிவைகளைப்பற்றி இப்பொழுது விசாரித்தல் தீய மதியேயாகும். காமதேவனருட்கு ஆட்பட்டான் எவனோ, அவன் மங்கையருக்குக் காமதேவனே யாவான். சிறந்த வடிவழகாலாகிய பயன் யாது? நங்கையர் நெஞ்சகமெனும் நன்மணியைத் தான் பெறுதலேயன்றோ? அப்பயனை அவன் பெற்றானென்றால், பின்னரும் இவ்வித யோசனையினாலென்ன பயன்? காரியம் முடிந்த பின்னர் காரணம் காணல் வேண்டாததே யாகும்.

"என்றலு மிவற்றி னாலென் னிறைவனை யவன்க ணார்வஞ்
சென்றது சிறந்த முன்னே திருவொடு திறலுந் தேசு
மொன்றிய வழகுங் கல்வி யொளியமை குலத்தோ டெல்லா
நின்றுசெய் பயனு நல்லார் நெஞ்சகம் பெறுத லன்றோ. II 34

காரிய முடிந்த பின்னுங் காரண முடிவு காணல்
காரிய மன்றி தென்றே கருதிடு கடவுள் காமன்
யாருழை யருளைச் செய்யு மவனமக் கனைய னாக
நேரிழை நினைந்து போகி நீடலை முடியி தென்றாள்.'' II 35

(6) “க்ஷாத்ர: க்ரியாநேஷ மஜோவஸேவீ
ந ஜாது நாரீ விக்ருதாபி வத்யா ।
ஸத் த்ரேதநூ தனு கிம் தா
யஶ: பரம் ஹ்ரஸ்யதி ஹாரஶாஹ்ரு ॥
க்ஷயம் ச யாஸே ரிவாவீரவாதீ
வக்ஷ: க்ஷயம் க்ஷாத்ரஜநே நிவாத்ய: ।
ஷாஷ்ட்ராஜ்ஞாரம் நிஷ்டுலிஸேதஹக்ஷாஹூ
ந ஹோரவே ஜாது ஹரி: ப்ரயாஸே ॥”

இதன் பொருள் :—பேதையாகிய இப்பாகனே மிகவும் புல்லியன்; ஏது குற்றஞ் செய்தாராயினும் பெண்பாலாரோ வதையினுக் குரியரல்லர்; இவர்களை வதஞ்செய்தல் சிறப்புற்ற க்ஷத்திரிய தர்மத்திற்குற்றதாகாது; நிற்க. இதனால், முத்துமாலை போன்று வெளுத்த புகழ்தானும் நழுவும்; பிறிது மொன்றுண்டு; போற்களத்தில் பகைவீரர்களை மடக்கும் இவ்வாளினை இப்புன்சாதியர் மேல் விடுத்தல் எவ்வாறு அடுக்கும்? சிங்கம் யானையின் மத்தகத்தைப் பிளந்து வழக்கப்பட்ட தன் கூரிய பற்களை நரியினிடத்துச் செலுத்தாது.

“ மாதரா ரெனைய ரேனும் வதையினுக் குரிய ரல்லர்
பேதைதா னிவனும் பெண்ணி னனையனே பிறிது மொன்றுண்
டேதிலார் மன்னர் சென்னி யிடுதலுக் குரிய வாளிற்
றீதுசெய் சிறுபுன் சாதி சிதைத்தலுந் திறமன் றென்றான்.''
II. 46.

(7) “ப்ராஹாஸமோஷ்டீம் விரசய்ய ஶைஷா
ஸம்க்ரீயஸோந: ஸ தயா நரேந்த்ர: ।
ஜவாந தஸ்யா: ஸாக்ஷாஸோரஜேஹம்
ஶ்ரீவாமஹீதேந நவோத்வேந ॥

தஷ்டிநாம வொஜ-பிவாக்ஷகோ-
நிவாதயஜீம் தநு-ஜீவ-நாயாழ் ।
ஆஸ்ராவலயம் ஸ்வ நவாரிவெலெகெ-
ரவொவஷெவம் கூரவயெவ ஜ-ஙுவ: ॥”

இதன் பொருள் :— அரசன் வேண்டுமென்றே, அவளுடன் கொஞ்சிக் குலாவிச் சிரித்துவிளையாடினவனாய், அவளது மெல்லிய வுடலின்மேல் தான் விளையாட்டிற்காகக் கையிலேந்தியிருந்த அழகிய கருநெய்தற் பூவினால் வீசினான். அவள் அவ்வடி பொறுக்கமாட்டாதவள்போல் மெய்யை நிலத்தில் வீழ்த்தாள். அரசன் அவளைச் சந்தன நீர் தெளித்துத் தேற்றி, அவளுக்காகத் தான் மனமிரங்கினவன்போல் இவ்வாறு கூறினான்.

“நகைவிளை யாடன் மேவி நரபதி விரகி னின்றே
மிகைவிளை கின்ற நீல மலரினின் வீச லோடும்
புகைகமழ் குழலி சோர்ந்து பொய்யினால் மெய்யை வீழ்த்தாள்
மிகைகமழ் நீரிற் றேற்ற மெல்லிய றேறி னாளே.” II. 52.

(8) “ கூடெநந ரஜெருஷ-ரவலவ்ரு-தா தெ
கூருஷாநடெநாஷ்ரு நிவீஷிதாயா: ।
தெஷெவெந கெநாவி வரம் விஷெதுீ
நிவாரித: ஸம்நிஹிதொடவி ஜூரசுரு: ॥”

இதன் பொருள்:—அடி சமர்த்தி! புரை புரை தோறும் நீரைப் பெருக்குவதும் கருத்த வாயையுடையதுமாகிய இதனால் மிகவும் வாதனையடைந்த உனக்கு இன்று நெருங்கி யடுத்துவந்த நமன் ஏதோ தெய்வ வசத்தினா லகன்றான்.

“புரைபுரை தோறு நீர்சேர் பொள்ளலிவ் வுருவிற் றூய
விருநிற மலரி னலின் றிவளுயி ரேக லுற்ற
தரிதினில் வந்த தின்றென் றவளுட னசதி யாடி
விரகினில் விடுத்து மன்னன் வெய்துயிர்த் தனனிருந்தான்.” II. 53

(இன்னும் வரும்).

# ஆறுதாரங்களும் குண்டலினியும்

ஆதாரங்களும் குண்டலினியும் எனப்பெயர் தந்து பிரமஞான சங்கத்தைச் சார்ந்த மிஸ்டர் C. W. லெட்பீடர் என்பார் அவர்களது பத்திரிகையான "தியாஸபிஸ்டு" என்பதிற் பிரசுரித்ததை, சித்தாந்த தீபிகையிற் பிரசுரிக்கப்பட்டிருந்தது. அதனையே சிவஞானசித்தியார் இலக்கணவிளக்க பரம்பரை ஸ்ரீ சிதம்பரநாததேசிகரது உரையில் விசேஷமாகச் சொல்லப்பட்டிருப்பதால் ஈண்டு அப்படியே தருகின்றோம்.

"சகமார்க்கம் புலனொடுக்கித் தடுத்துவளி யிரண்டுஞ்
சலிப்பற்று முச்சதுர முதலாதா ரங்க
ளகமார்க்க மறிந்தவற்றி னரும்பொருள்க ளுணர்ந்தங்
கணைந்துபோய் மேலேறி யலர்மதிமண் டலத்தின்
முகமார்க்க வமுதுடல முட்டத் தேக்கி
முழுச்சோதி நினைந்திருத்தன் முதலாக வினைக
ளுகமார்க்க வட்டாங்க யோக முற்று
முழத்தலுழந் தவர்சிவன்ற னுருவத்தைப் பெறுவர்."

(உரை.) சகமார்க்கமென்றது: யோகபாதமாகிய சகமார்க்கமாவது; புலனொடுக்கி: பத்மமுதலிய வாதனங்களில் ஒன்றிலிருந்து புலன்களின் வழிச்செல்லாதபடி ஆமையானது அவயவங்களையுள்ளேயடக்குமாறுபோல வடக்கி; தடுத்து வளியிரண்டுஞ்சலிப்பற்று: ரேசகபூரகங்களில் வாயுசலிக்குமதனைத் தடுத்துக் கும்பித்திருந்து பிராணவாயுவைச் சுழுமுனையிலே நிறுத்திப் பிராணுயாமஞ்செய்து; முச்சதுரமுதலாதாரங்களகமார்க்கமறிந்து=தனது சரீரத்தினுள்ளே முக்கோண முதலிய வாறுதாரங்களினதாகிருதியையு மதிருக்குந்தானங்களையும் வடிவு முதலியவற்றையுமதுவதுவாக; அறிந்து அவற்றி னரும்பொருள்களுணர்ந்து = மூலாதாரமுதலிய வாதாரங்கடோறுமிருக்கும் பத்மதளங்களையும் அவற்றிலிருக்கும் அதிதேவதைகளையும், அக்கரங்களையுமறிந்துதியா

னித்து; அங்கணைந்துபோய் மேலேறியலர்மதிமண்டலத்தின் முக மார்க்கவமுதுடலமுட்டத்தேக்கி—மூலாதாரத்திலிருக்கும் அக்கினி மண்டலத்தினக்கினியைச் சொலிப்பித்து அதனாலே சந்திர மண்டலமாகிய நாபித்தானத்திலிருக்கும் குண்டலினி சத்திசொரூபியாயிருக்கும் அமிர்தத்தை யுருகப்பண்ணி மற்றவாதாரங்கள் அனைத்தினுமடைவே யதோமுகமான பத்மங்களினது முடிச்சுக்களை யடைவே யதனைக்கொண்டு பேதித்து மேலேசென்று விந்துத்தானத்தின் வழியே யிறங்கிப் பெருகாநின்ற வமிர்தத்தாற் றனதுடல் முழுது நிறைந்தவாறே மந்திர பீசாக்கர முச்சரிக்கிறதெல்லாம் விளங்கும்; முழுச்சோதிநினைந்திருத்தல்-எது-தான்முன் தியானம் பண்ணப்படும் பொருளிடத்திலே அடிக்கிற காற்றுனது எப்படிச் சலியாமற் பரந்திருக்குமோ அதுபோல பரிபூரணமான பிரகாசானந்தத்தில் அழுந்தியிருத்தல்சமாதி; இதனாற்பயன் யாதெனில்; முதலாகவினைகள் எது - இம்மைக்கட்கன்மமுதலிய பாசங்களினது வலி கெட்டுப்போம்படியு மறுமைக்கண்முத்தியடைகையின்பொருட்டு; மார்க்க...... உழுந்தவர் - எது - சகமார்க்கமாய் யோகபாதத் தட்டாங்கயோகத்தை—இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம்—ஆதியுடனுடொறும் வருந்திச் சாதித்தவர்கள்; சிவன்றனுருவத்தைப் பெறுவர்—எது - சிவனது திருமேனியைப் போலத் தாங்களும் வடிவையெடுத்துக்கொண்டு அவனது சமீபத்திலிருப்பார்கள் என்றவாறு. இது பொழிப்பு: இனி அகலம் வருமாறு:—

மூலாதாரமாவது:— குதத்துக்கு இரண்டங்குலத்துக்குமேல் இலிங்கத்துக்கு இரண்டங்குலத்துக்குக் கீழெனவறிக. இதற்குவடிவம் முக்கோணமாயிருக்கும், செந்தாமரையிதழ்கள் நான்கு; இவற்றினிற்கு மக்கரங்களாவன வ, ஶ, ஷ, ஸ. நான்கிதழ்களுக்கும் தேவதைகளாவன. விநாயகன், வைரவன், க்ஷேத்திரபாலன், சண்டன் என நான்காம்.

மேல் சுவாதிட்டானமாவது:—இதற்குத் தாவம் இலிங்கமூலம். வடிவு அறுகோணம். மிக்கபிரகாசத்தினையுடைய வாறிதழ்த்தாமரை; இவற்றினிற்கு மக்கரங்கள் ப, ஹ, ே, ய, ர, ● என்பன.

மேல் மணிபூரகம்:—தானம் நாபி; வடிவு மூலவட்டம். இரத்தினப்பிரகாசம்போன்ற தாமரையிதழ்பத்து, இவற்றினிற்கு மக்காங்கள் ஶ, ஜ, ண, த, ய, ஆ, ய, ந, வ, ஷ என்பன.

மேல் அநாகதம்:—இதற்குத்தானம் இருதயகமலம். வடிவுமுக்கோணம். இதற்குப் பொன்னிறத்தினையுடைய விதழ்கள் பன்னிரண்டு. இவற்றினிற்கு மக்கரங்கள் க, வ, ழ, வ, ஜ, வ, ஊ, ஜ, ஸ, ஞ; ட, ○ என்பன.

விசுத்தியாவது:—இதற்குத்தானம் கண்டகூடம். வடிவு பதினாறு கோணம். வெண்டாமரைத்தளம் பதினாறு. இவற்றினிற்கு மக்கரங்கள் அ, ஆ, இ, ஈ, உ, ஊ, ரு, ரூ, லு, லூ, ஏ, ஐ, ஓ, ஔ, அம், அஃ॥ என்பன.

ஆக்கினைக்குத் தானமாவது:—புருவமத்தி, இதற்குப்பத்மதளங்களாவன இரண்டு. இவற்றினிற்கும் அக்கரங்கள் ஹ, க்ஷ என இரண்டு. இதுகூடின பத்மத்தில் பரமசிவனெழுந்தருளியிருப்பர். இது பெரும்பான்மையாதலின், சிறிதாகமங்களிற் சிறுபான்மையாக நவாதாரத்தின் முறைமையைக்கூறிற் பெருகுமாயினுஞ் சிறிது கூறுதும்.

மூலாதாரமுதல் விசுத்தியீறாக முன்புபோலிதற்குங் கிரியாசத்தி இச்சாசத்தி, ஞானசத்தி யிம்மூன்றும் மூன்றுமண்டலம். அஃதொவ்வொன்றுக்கும் பதினாறுதளமும், அதில் அகாரமுதலிய எழுத்துப் பதினாறும் விந்து நாதங்களுடன்கூடி மேற் பிரமரந்திரத்திற் பத்மதளமுன்னூற்றறுபதுடன் கூடினகமலம் பராசத்திமயமாயிருக்கும்; அதிற்பரம சிவனைப்பாவிக்கின் முத்தியடைவார்களென அறிக; இதற்குப் பிரமாணம் சுப்பிரபேதம், மகுடம், சிந்தியம், விசுவத்துங் காண்க.

இலக்கணவிளக்க பரம்பரை,

திருவாரூர், சோமசுந்தரதேசிகன்.

---

299

உ

திருச்சிற்றம்பலம்

# *சோழநாட்டின் தமிழபிமானம்

### தமிழ்த்தெய்வ வணக்கம்

மறைமுதற் கிளந்த வாயான் மதிமுகிழ் முடித்த வேணி
யிறைவர்தம் பெயரை நாட்டி யிலக்கணஞ் செய்யப் பெற்றே
யறைகடல் வரைப்பிற் பாடை யனைத்தும்வென் றாரி யத்தோ
டுறழ்தரு தமிழ்த்தெய் வத்தையுண் ணினைந் தேத்தல்செய்வாம்.

### அவையடக்கம்

வல்லவியற் புலவர்பல கவிக டோறும்
வழுக்கள்வந்த வகைதேடி மயங்கா வண்ணஞ்
சொல்லினது விதிக்குற்ற மெழுத்தின் குற்றந்
தொடர்நிலைச்செய் யுளின்குற்றந் தொடர்பின் குற்றம்
நல்லதொடை களின்குற்றங் குணத்தின் குற்றம்
நவரசத்தின் குற்றமோ டனந்த குற்ற
மெல்லையற்ற குற்றமெலா மெளிதிற் காண
விலக்கியமா வதற்கிதனை யியம்பு கேனே.

என்று ஒரு புலவர் கூறியபடி சொற்குற்றம், பொருட்குற்றம், அவையஞ்சிமெய்விதிர்ப்பு முதலாகிய குற்றங்களை யேகதேசமாக ஒவ்வோரிடத்திற் காணமல் ஒருங்கே அடியேனிடத்திலேயே எளிதாக எல்லாரும் காணும்படி யிவ் வுபந்நியாசம் உபந்நியசிக்கப் பெறும்.

நமது தாய்ப்பாஷையாகிய தமிழ்ப்பாஷை பரங்கருணைத்தடங் கடலாகிய பரமசிவன்பாற் றோன்றி ஆசிரியர் அகத்தியமுனிவரால் வளர்க்கப்பட்டதாகும். "தழற்புரை சுழற்கடவுள் தந்ததமிழ் தந்தான்" (ஆரணியகாண்டம், அகத்தியப்படலம்-சக.)

* இவ்வியாசம், மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் பத்தாம் வருஷோற்சவ காலத்தில் (26—5—11-ல்) படிக்கப்பெற்றது.

தெய்வத்தோற்றமுடையதாய்த் தெய்வத்தன்மைபொருந்திய மகரிஷியினுல் வளர்க்கப்பெற்ற நமது செந்தமிழ்ப்பாஷை "வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பில், நாற்பெய ரெல்லை யகத்தவர் வழங்கும், யாப்பின் வழியது" என ஆசிரியர் தொல்காப்பியனுர் பொருளதிகாரச் செய்யுளியலிற் கூறியபடி, சேர சோழ பாண்டியர்களாற் செங்கோல் செலுத்தப்பெற்ற வடவேங்கடம் தென்குமரியென்பவற்றின் இடையிலுள்ள நிலவுலகில் அம் மூவேந்தர்களின் உத்தமோத்தம ஔதாரியங்களாற் பெருந்தமிழ்ப் புலவர்களாற் பெரிதும் நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாக வளர்ந்தேறிவந்தது. இதனை,

"மும்மலையு முந்நாடு முந்நதியு முப்பதியு
மும்முரசு முத்தமிழு முக்கொடியு—மும்மாவுந்
தாமுடைய மன்னர் தடமுடிமேற் றான்றே
பாமுறைதேர் வள்ளுவர்முப் பால்."

என்னுந் திருவள்ளுவமாலை உபோற்காதச் செய்யுள் வலியுறுத்தும். இம் முப்பெரு மூவேந்தரும் இப் புவியைப் படைப்புக்காலந்தொடங்கியே ஆண்டுவந்ததாக ஆன்றோர் கூறுவர். "வழங்குவ துள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி, பண்பிற் றலைப்பிரித லின்று" என்னுங் குறட்பாவிற்குப் பழங்குடி - தொன்றுதொட்டு வந்த குடி யெனவும், தொன்றுதொட்டு வருதல்-சேர சோழ பாண்டியர்போலப் படைப்புக் காலந்தொட்டு மேம்பட்டுவருதல் எனவும் ஆசிரியர் பரிமேலழகர் வரைந்திருப்பது அறிஞர்களறிந்ததாம். இவ் வரசர் மூவரிற் "பிள்ளைக்குந் தொட்டிலுக்குந்தான் பாத்தியம், செட்டிக்கும் தொட்டிலுக்கும் பாத்தியமில்லை." என்று சமீபகாலத்திருந்த சிலேடைபேசுவதிற் சாமர்த்தியசாலியாகிய ஒருவித்துவான் கூறினுற்போலப் பாண்டியரசர்களுக்குந் தமிழ்ச்சங்கங்களுக்குந்தான் வெகுபொருத்தமென்று தெரிகிறது. எப்படியெனில் முதல் மூன்றுசங்கங்களையும், இப்பொழுதைய நான்காஞ் சங்கத்தினையும் உண்டாக்கிப் பரிபாலித்தவர்களும், பரிபாலிப்பவரும் பாண்டியரசர்களும் ஸ்ரீமாந்-பாண்டித்துரைச்சாமியவர்களுமே யென்பது உலகமறிந்த விஷயம்.

மூவேந்தர் தமிழ்நாட்டை முறைபுரிந்து மும்முறையு
முதன்மை யான
பாவேய்ந்த தமிழ்ச்சங்கம் பாண்டியரே நிலைநிறுத்தும்
பான்மை பெற்றார்
நாவேய்ந்த விம்முறையு நான்காவ தாஞ்சங்கம்
நாளு மோங்கக்
காவேய்ந்த கரதலத்தெங் காவலன்பாண் டித்துரையே
கருதிச் செய்தான்.

இன்னும், எம் நண்பர் மதுரைத் தேவஸ்தானங் கமிட்டி மெம்பர் ஸ்ரீமாந். அ. இராமநாதன் செட்டியாரவர்கள்,

"பிறந்தசங் கத்தை யெடுத்துயிர் கொடுத்துப்
பின்னுமோர் சிறுதொனி கேட்பா
ரிறந்தசங் கத்தை யெடுத்துயிர் கொடுத்தஃ
தெங்கணும் முழங்குறச் செய்தான்"

என்றவற்றால் இனிது விளங்கும். இவை நிற்க,

இனிச் சோழரும், சேரரும் சங்கம் நிறுவாவிடினும், பாண்டியரைப்போன்றே தமிழை வளர்த்துவந்திருக்கிறார்களென்ப தொரு தலையாம். இவர்களிற் சோழநாட்டின் தமிழபிமானத்தைப்பற்றியே இம் மகாசபையிற் சிறியேன் சிற்றறிவிற்கெட்டிய மட்டில் கூறப் புகுந்தது.

எல்லை

"கடல்கிழக்குத் தெற்குக் கரைபொருவெள் ளாறு
குடதிசையிற் கோட்டைக் கரையாம்—வடதிசையி
லேணாட்டுப் பண்ணை யிருபத்து நாற்காதஞ்
சோணாட்டுக் கெல்லையெனச் சொல்." (என்பது கம்பர் கவி.)

சோழ அரசர்கள் இந் நாட்டுடன் புறநாடுகளையுங் கைப்பற்றி இராஜராஜர்கள், சக்கரவர்த்திகள் எனப் பெரும்பெயரெய்தி மிக்க வல்லமையோடு செங்கோல் செலுத்தியதாகப் பலநூல்களால் வெளியாகின்றது.

## செந்தமிழ் நிலம்

திராவிடமகாபாஷிய கர்த்தாவாகிய ஆசிரியர் ஸ்ரீசிவஞான யோகீஸ்வரர் காஞ்சிப்புராணத்து,

"காசியி னின்றும் போந்து கம்பர்தா மருளப் பெற்று
மாசிலாக் கச்சி மூதூர் மன்னிவீற் றிருந்து பூமே
லாசிலாத் தமிழ் பரப்பி யருந்தமிழ்க் குரவு பூண்ட
தேசினன் மலைய வெற்பிற் குறுமுனி திருத்தாள் போற்றி."

என்று செந்தமிழ்நிலம் தொண்டைநாட்டுக் காஞ்சிநகர் வரைப்பென்று உணர்த்துகிறார்கள்.

## நன்னூல் விருத்தி உரைகாரர் செந்தமிழ் நிலம்

"சந்தனப் பொதியச் செந்தமிழ் முனியுஞ்
சௌந்தர பாண்டிய னெனுந் தமிழ்நாடனுஞ்
சங்கப் புலவருந் தழைத்தினி தோங்கும்
மங்கலப் பாண்டி வளநா டென்ப" என்றுரைப்பர்.

## தொல்காப்பிய உரையாசிரியர்கள் செந்தமிழ்நிலம்

"வையையாற்றின் வடக்கும், மருதயாற்றின் றெற்கும்,
கருவூரின் கிழக்கும், மருவூரின் மேற்குமாம்" என்பர்.

இதனாற் செந்தமிழ்நிலம் சோழநாடு என்பதாயிற்று. அமிழ்தினுமினிய தமிழ் மொழியைச் செம்மையாக ஆராய்ந்தறியும் ஆன்றோர் நிறைந்த இடமே செந்தமிழ் நிலமாகும் என்பது அறிஞர் கொள்கையாம். இவ்வாறு சோழநாட்டிற் செந்தமிழ்ப் பரிபாலனஞ் செய்துள்ளவர்கள் பல்லாயிரவர்களென்பதே யிங்குக்கூறத் துணிந்தது.

"மன்ற வாணன் மலர்திரு வருளாற்
றென்றமிழ் மகிமை சிவணிய செய்த
வடியவர் கூட்டமு மாதிச் சங்கமும்
படியின்மாப் பெருமை பரவுறு சோழனுஞ்

> சைவமா தவருந் தழைத்தினி திருக்கு
> மையறு சோழ வளநா டென்ப"

என்ற ஆன்றோரது இச் செய்யுளால் சோழநாட்டில் ஆதியில் ஒரு சங்கமிருந்ததாக வெளியாகிறது. அஃது இன்ன இடத்தில் இன்ன சோழனால் நிறுவப்பெற்று இத்தனைகால மிருந்ததென்றுவிளங்க வில்லை. ஆனாலும் திருவாரூரில் ஒரு சங்கமிருந்ததாக அடியேற்குக் கேள்வி.

சோழ அரசரிற்பலர் "இருவே றுலகத் தியற்கை திருவேறு, தெள்ளிய ராதலும் வேறு" என்னும் பொய்யில் புலவர் திருவாக்குப் பொய்யாகும் வண்ணம் திருவுடையராகவும் தெள்ளியராகவுமிருந் திருப்பது எட்டுத்தொகை, பத்துப்பாட்டு முதலிய சங்க நூல்களால் அறியப்பெறும். சோழன்செங்கணான் என்பவன், சேரமான்கணைக்காலிரும்பொறையுடன் போர்புரிந்து அவனைப்பிடித்துக் கொண்டுபோய்ச்சிறைசெய்திருந்த காலத்திற் பொய்கையார் என்னும் புலவர் பெருமான் களவழிநாற்பதுபாடி மீட்டதும், இன்னுஞ் சோழன் குளமுற்றத்துத்துஞ்சியகிள்ளிவளவன் மலயமான் மக்களை யானைக்கு இட்டகாலத்திற் கோவூர் கிழார் என்னும் வித்துவான் பாடல்பாடிப் பிழைக்கச் செய்ததும் இவ் வரசர்கள் தமிழில் வைத்த பேரன்பைக் காட்டும்.

கடியலூர் உருத்திரங் கண்ணனார் என்னும் பெரும் புலவர் கரிகாற்பெருவளவன் என்னும் சோழன்மேல் பட்டினப்பாலை யென்னும் பிரபந்தம்பாட அவ் வரசன் அப்புலவருக்குப் பதினாறு நூறாயிரம் பொன் பரிசளித்துப் பிரபந்தத்தைக் கொண்டான் என்பர். இவற்றைத் திரிபுவன சக்கரவர்த்தியெனப்பட்டந்தரித்து வேங்கைநாடு, சோழநாடு, தொண்டைநாடு, கொங்குநாடு, பாண்டிநாடு என்ற ஐந்து மண்டலங்களுக்கும் அரசனாக இருந்த குலோத்துங்கசோழன் மேல் ஜயங்கொண்டாரென்னும் புலவர்பாடிய கலிங்கத்துப்பரணியில்.

> "தளவழிக்குநகை மேல்விழி பிலத்தின் வழியே
> தனிநடந்துரகர் தங்கள்பதி கொண்ட வவனும்

களவழிக்கவிதை பொய்கையுரை செய்ய வுதியன்
கால்வழித்தளையை வெட்டியர சிட்ட வவனும்." என்றும்,

"தத்து நீர்வரால் குருமி வென்றதுந்
தழுவு செந்தமிழ்ப் பரிசில் வாணர்பொன்
பத்தொ டாறுநூ றாயிரம் பெறப்
பண்டு பட்டினப் பாலை கொண்டதும்." என்றும்,

கூறியிருப்பன கவனிக்கத் தக்கன.

இன்னும், உறையூரிலிருந் தரசியற்றிய கரிகாற்சோழன் அறு பத்துநான்கு கலைகளையுங் கற்றிருந்தானென்றும், இராஜசேகரனென்னும் பாண்டியன் 63-கலைகள்கற்றிருந்தானென்றும், சோழதேசத்துப் புலவனொருவனாற்றெரிந்து பின்னர் அவ்வொன்றையுந் தெரிந்து கொண்டானென்றுந் திருவிளையாடற் புராணங்கூறும்.

"பொன்னி நாடவன் வாயிலுள் ளானொரு புலவன்வந் தலர்வேம்பின்
கன்னி நாடனைக் கண்டுமுன் பரவுவான் கனைகழற் கரிகாலெம்
மன்ன வற்கறு பத்துநாற் கலைகளும் வரும்வரா தனக்கொன்று
தென்ன ரேறனை யாயது பரதநூல் தெரிந்திலை யெனச்சொன்னான்."

கம்பர் சோழநாட்டுத் திருவழுந்தூரி லவதரித்துச் சோழவரசராலுந் திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப வள்ளலாலும் அன்பும் ஆதரவும்பெற்றுக் கவிச்சக்கர வர்த்தியென்றுலகு கொண்டாட "இராமாயணம்" பாடி "இன்று இவ்வுலகங்கள் இராமன்' பாக்குந் தொல்புகழமுதினைப்பருகுகின்றனவே" யென்று அவர்கூறியபடி உபகரித்திருப்பது உலகமறிந்தவிஷயம்.

"பெற்று வளர்த்தும் வித்தைதனைப்
பேணிக் கொடுத்தும் பெயர்கொடுத்தும்
பற்ற வரும்பா லமுதளித்தும்
பகைத்த வறுமைப் பயந்தீர்த்தும்
கற்ற முதனூற் திருவழுந்தூர்க்
கம்பன் றனையக் கருணைசெய்தோர்

மற்றும் புலவோ ரையும்வாழ
வைத்தார் சோழ மண்டலமே."

"குணங்கொள் சடையன் புதுச்சேரிக்
கொடையன் சேதி ராயன்முதற்
கணங்கொள் பெரியோர் பலர்கூடிக்
கம்ப நாடன் களிகூற
விணங்கும் பரிசி லீந்துபுவி
யேழும் புகழே ரெழுபதெனும்
மணங்கொள் பெருங்காப் பியப்பனுவல்
வகித்தார் சோழ மண்டலமே."

என்று கூறியதனாற் கம்பர் ஏரெழுபதென்னும் பிரபந்தம்பாடிச் சடையப்ப வள்ளலுஞ் சேதிராயனும் ஏனைய பெரியோர்களுநிறைந்த சபையில் அரங்கேற்றியது விளக்கமாம்.

இன்னும், சிங்களதேசத்தரசனாகிய பராராஜசிங்கப் பெருமான் என்பவன் ஈழநாடு பஞ்சத்தால் வருந்தியகாலத்திற் சடையவள்ளலைப் பாட்டாற் றுதிக்க இவர் ஆயிரம் (1000) கப்பலில் நெல்நிறைத்தனுப்பி யவன் நாடுமுழுவதையும் பாதுகாத்ததாகவுந் தெரிகிறது.

"தேனார் தொடையார் பராசசிங்கப் பெருமான் செழுந் தமிழ்க்
கானார் நெல்லின் மலைகோடி கண்டி நாடு கரை சேரக் [குக்
கூனார் கப்ப லாயிரத்திற் கொடுபோ யளித்த கொடைத்தடக்கை
மானா கரன்சங் கரன்சடையன் வளஞ்சேர் சோழ மண்டலமே."

மேற் குறிப்பிட்ட பராராசசிங்கப் பெருமான் சடையவள்ளலுக் கெழுதிவிட்ட கவி பின்வருங் கவியாயிருக்கலாமென்று ஊகிக்கப்படுகிறது.

"இரவு நண்பக லாகி லென்பக லிருள றுவிர வாகிலென்
இரவி தெண்டிசை மாறி லென்கட லேழு மேறிலென் வற்றிலென்
மரபு தங்கிய முறைமை பேணிய மன்னர் போகிலென் னாகிலென்
வளமை யின்புறு சோழ மண்டல வாழ்க்கை காரண மாகவே

கருது செம்பொனி னம்ப லத்திலோர் கடவு ணின்று நடிக்குமே
காவி ரித்திரு நதியி லேயொரு கருணை மாமுகில் துயி லுமே
தருவு யர்ந்திடு புதுவை யம்பதி தங்கு மன்னிய சேகரன்
சங்க ரன்றரு சடைய னென்றொரு தரும தேவதை வாழவே."

தவிரவும், ஒட்டக்கூத்தர் சடையவள்ளலின் தந்தையாகிய சங்கரன் என்பவருக்கு உதவித்தொழில் புரிந்துகொண்டிருந்தாரெனவும், காங்கேயன் என்னும் உபகாரியொருவன் அவருக்குக் கல்வி பயில்வித்து நல்லறிஞராக்கிக் கவிராட்சதன் எனவும் கௌடப்புலவனெனவும் பெயர்கொடுத்துச் சிறப்பித்தானெனவும், அவர் அந் நன்றி பாராட்டிக் காங்கேயன்மேல் நாலாயிரக்கோவை பாடினதாகவுந் தெரிகின்றது. அன்றியும், ஒட்டக்கூத்தர் குலோத்துங்கசோழன் ஆசிரியராகவும், இராஜாங்க நிர்வாகராகவு மிருந்ததும், உத்தரகாண்டம் பாடியதும் பிறவும் யாவரும் நன்கறிந்த விஷயங்களாம்.

"ஆடுங் கடைமணி நாவசை யாம லகிலமெங்கு
நீடுங் கொடையைத் தரித்தபிரா னிந்த நீணிலத்திற்
பாடும் புலவர் புகழொட்டக் கூத்தர் பதாம்புயத்தைச்
சூடுங் குலோத்துங்க சோழனென்றே யெனைச் சொல்லுவரே."

என்று குலோத்துங்கசோழன் பட்டாபிஷேககாலத்தில் வாழ்த்தாகக் கூத்தர் இரண்டடிகளைப்பாட மற்றிரண்டடிகளை மேற்கூறிய அரசர் பூர்த்திசெய்ததாகச் சொல்லப்படுகிறது. கூத்தர் உத்தரகாண்டம் பாடி அரங்கேற்றியதைப்பற்றிப் பின்வருங்கவி நன்குவிளக்கும்.

"பூணு லாவுங் கம்பனலம் பொலியுந் தமிழாற் புகழெய்திக்
காணு மாறு காண்டமுறுங் கதையிற் பெரிய கதையென்னுந்
தாணி லாவுங் கழலபயன் சபையிற் பயி லுத் தரகாண்டம்
வாணி தாச னரங்கேற்ற வைத்தார் சோழ மண்டலமே."

இவை நிற்க, பிறக்க முத்திதரும் திவ்யஸ்தலமாகிய திருவாரூரிலரசியற்றிய ராஜராஜ அபயகுலசேகர சோழமகாராஜாவாற் சமயகுரவர் மூவர் அருளிச்செய்த திராவிடவேதத்திருமுறைகள் வெளியேற்றப்பெற்றுத் தமிழுலகம் இன்றும் என்றும் பிறவிப்பெருநோய்

தீர்க்கும் பேரமுதாகக்கொண்டு வாழ்வது எல்லார்க்கும் அநுபவசித்தமாம். தற்காலம் இம் மூவர் முதலிகளின் தேவாரம்பெற்ற சிவஸ்தலங்கள் இருநூற்றெழுபத்துநான்காம். இந்த இருநூற்று எழுபத்துநான்கிற் சோழநாட்டிற் பாடல்பெற்றஸ்தலங்கள் (190) நூற்றுத் தொண்ணூறும்.

"ஈண்டுபுகழ்ச் சோணாட்டி லொருநூற்றுத் தொண்ணூறீ ழத்திரண்டு, பாண்டியிலீ ரேழ்மலைநாட் டொன்றுகொங்கேழ் மகதமிரு பத்திரண்டு, பூண்டதொண்டை நன்னாட் டெண் ணான்குதுளு வொன்றுவட புலத்தைந் தாகும், ஆண்டசிவஸ் தலமிருநூற் றெழுபத்து நான்குதொகை யாகு மன்றே."

விஷ்ணுமகாஸ்தலங்கள் நூற்றெட்டில் நாற்பது திவ்யதேசங்கள் சோணாட்டில் ஆழ்வார்களால் மங்களாசாஸநம் பெற்றுள்ளன. சமயாசாரியர் மூவரைத்தவிர அறுபத்துமும்மை நாயன்மார்களில் ஒருவராகிய திருமூலநாயனர் திருவாவடுதுறையில் அரச விருட்சத்தின்கீழ் மூவாயிரம் வருஷம் சிவயோகத்திருந்து வருஷம் ஒவ்வொரு திருப்பாடலாக மூவாயிரந் திருப்பாடல்களாற் சைவாகமங்களிலுணர்த்தப்பெற்ற சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு பாதங்களையும் உணர்த்துகின்ற செந்தமிழ்நூலைத் தந்தருளியிருப்பதும், காரைக்காலம்மையார், அற்புதத் திருவந்தாதி முதலிய நூல்களை யருளியிருப்பதும் குறிப்பிடத்தக்கதாம். அம்மட்டோ! இம்மை மறுமை வீடு மூன்றும் பயக்கும் பெரியபுராணத்தை அநபாய சோழமகாராஜாவால் ஸ்ரீ சேக்கிழார் திருவாய்மலர்ந்தருள அது சைவ சிரோபூஷணமாக விளங்கிவருவதும் அறிஞர்களறிந்ததே.

காவிரிப்பூம்பட்டினத்திற் குபேரனர் திருவவதாரமாகத் திருவெண்காடனரென்னும் பட்டினத்தடிகள் திருவவதாரமாகிப் பெருமான் சந்நிதியில் அன்புபெருக உரைதடுமாறி யுரோமஞ்சிலிர்ப்பக் கரமலர் குவித்துக் கண்ணீர்ததும்ப ஆனந்தபரவசராய் மனங்குழைந்துகுழைந்துருகப்பாடிய பாடற்றிருமுறைகளைப் பதினொராந் திருமுறையிற் படித்துப்படித்துப் பரமானந்தங் கொள்ளநின்று கிலவி வருவதை அறியாதார் யார்? சந்தானசாரிய பீடமாகவிளங்குந் திருக்கைலாயபரம்பரைத் திருவாவடுதுறையாதீனம், தருமபுரவாதீ

னம், சொர்க்கபுரவாதீனம் முதலிய ஆதீனாதிபதிகளாலும், அவ்வாதீனங்களின் சிஷ்யகோடிகளாலுந் தோன்றிய பைந்தமிழ்ப் பனுவல்களும், உரைகளும் பலவாம். அவற்றில் திருவாவடுதுறையாதீனம் மாதவச் சிவஞானயோகிகள் செய்திருக்கும் பேருபகாரம் பாருள்ளளவும் பாராட்டத்தக்கதேயாம்.

"பேனமார்ந் தொழுகும் பெண்ணைசூழ் வெண்ணைப் பெருநகர் வாழும்மெய் கண்ட, ஞானமார் குரவன் நவின்றிடு நூற்கு நன்மைசேர் பாடிய மியற்றி, யூனமார் பிறவிக் கடலுழல் வோர்கட் குறுபுணை யாகவே யளித்த, ஞானயோ கிகடந் திருவடிக் கமல நாஞ்சிரத் தணிந்துவாழ்த் தெடுப்பாம்."

இது திருப்பனந்தாளாதீன கர்த்தாவாயிருந்த காசிவாசி-ஸ்ரீ குமாரசுவாமிச் சுவாமிகள் ஸ்ரீசிவஞானயோகிகள் மேற்செய்த தோத்திரமாம். இவ்வாறே ஸ்ரீ சிவஞானயோகிகள் மேல் நமது சங்கத்தின் அக்கிராசனாதிபதியும் அருங்கலைவிநோதரும் ஆகிய ஸ்ரீமாந்-பாண்டித்துரைச்சாமியவர்கள் இரட்டைமணிமாலை முதலிய பாமாலையணிந்து பாராட்டியிருப்பது பாராட்டத்தக்கதே?

இன்னும் ஸ்ரீ மெய்கண்ட சந்ததியில்வந்து சீகாழியிலிருந்த சிற்றம்பலநாடிகள் என்னும் சிவாநுபூதிச் செல்வரால் துகளறுபோதம், சதமணிக்கோவை, ஞானசாகரவெண்பா முதலிய சைவசித்தாந்த நூல்கள் வெளியேறியிருப்பனவும், பிறவும் கவனிக்கத்தக்கன.

திருவாரூர் ஸ்ரீ வயித்தியநாத நாவலரால் இலக்கண விளக்கம் வெளிப்பட்டுக் "குட்டித்தொல்காப்பியம்" எனப் புகழ்பெற்று விளங்குவதும், ஸ்ரீ தாயுமானசுவாமிகளால் மதுரம்பழுத்துத் தேன்றுளிக்கும் வளச்செம்பாகக் கவிகளாய்த் தோத்திர நூலாகவுஞ் சாத்திர நூலாகவும் அமைந்து கர்த்தாவாகு பெயராய்ச் செகஜோதியாய் விளங்குவதும் எல்லாரும் அறிந்ததாம். திரிசிரபுரத்தில்,

"தேனாட்சி செயுங்கொன்றைச் செஞ்சடையான் றிருவடிக்கே சிந்தை யாவுந், தானாட்சி செயக்கொடுத்த தகைமையினன் றமிழ்த்தெய்வ மாகி வந்த, மீனாட்சி சுந்தரப்பேர் நாவலன்"

அவர்களால் எத்தனையோ சிறுபிரபந்தங்களும் பெரும்பிரபந்தங்களும் வெளியாகிக் கற்பவர் நெஞ்சைக் காமுறச்செய்து வருவனவற்றை யறியாதார் யார்? அவர்கள் மாணுக்கராகிய,

கலைநாதன் குலநாதன் கற்றவழி நிற்பதற்குக் காட்டாய்க் காட்டும்
நிலைநாதன் குணநாதன் நேயமிகு கலையமுதை நேசித் தூட்டும்
நலநாதன் நயவசன நன்னுதன் நாவலர்க டங்கட் கெல்லாந்
தலைநாதன் தவநாதன் சாமிநா தப்பெயர்கொள் தமிழ்வ லோனே.

என்றபடி ஸ்ரீமத்-மகாமகோபாத்தியாயர் சாமிநாதையரவர்கள்,

"முன்னவர்கள் புதைத்துவைத்த முழுப்பொருளை யெடுத்தீயும் முறைமை போலத், தன்னிகரில் முன்னூலைத் தமிழுலகங் களிதுளும்பத் தந்து." வருவனவற்றையும் அறியாதார் யார்?

ஆகையால், இதுகாறுங் கூறியவாற்றாற் சோழ அரசர்களும், சோழநாட்டுப் பிரபுக்களும் செந்தமிழ்ப் புலவர்பால் அன்பும் அருமையும் பாராட்டிச் செந்தமிழணங்கைச் சுந்தரமாக வளர்த்துவந்திருக்கிறார்களென்பதனையே யிம் மகாசபையில் விண்ணப்பித்துக் கொண்டதென்க. அத்தகைய அன்பும் அருமையும் தளராமல் வளருமேயானால் நமது தமிழணங்கிற்கு எவ்வளவோ அதிகச் சிறப்பாயிருக்கும்.

"அறமுரைத் தானும் புலவன்முப் பாலின்
றிறமுரைத் தானும் புலவன்—குறுமுனி
தானும் புலவன் தரணி பொறுக்குமோ
நானும் புலவ னெனில்."

என்று பொய்யாமொழிப்புலவர் கூறியாங்கு மகாவித்வ சிரேஷ்டர்கள் நிறைந்த இம் மகாசபையில் நானும் ஒரு புலவன்போல நடித்துத் தங்கள் நிலையுயர்ந்த மேலானகாலத்தை யிப்புன்மொழிகளாற் கவர்ந்ததற்கு என்னை மன்னிக்கவேண்டுவதுடன் மேலே கூறியவற்றிலுள்ள குற்றங்குறைகளையெல்லாம் மன்னிக்கவும் வேண்டுகிறேன்.

ஜி. சதாசிவப்பிள்ளை.

# RANI BHAVANI

# ராணி பவானி

ஜீவித சரித்திரங்களை உள்ளபடியே எழுதிவைக்காத குறை இந்தியர்களுக்கு வெகுகாலமாக உள்ளது. கிரமமான சரித்திரங்களில்லாததனால் இத்தேசத்துக்குப் பலவிதங்களில் பலகுறைவுகள் ஏற்பட்டிருப்பதன்றித் தேசம் அபிவிருத்தியாவதற்கு அநுகூலங்கள் இல்லாமற் போயின. குணசாலிகளும் புண்ணிய புருஷர்களும் வித்துவான்களும் ராஜதந்திர நிபுணர்களும் எத்தனையோபேர் இத்தேசத்திலிருந்திருக்கிறார்கள். அப்படி அவர்கள் கீர்த்திபெற்றபிறகு அவர்களுடைய காரியங்களிற் சிலவற்றை ஜனங்கள் சொல்லிக்கொள்கிறார்களேதவிர, அவர்களுடைய பூர்வோத்தரத்தையும், இளமைப்பழக்கம், இல்வாழ்க்கை, நடையுடைபாவனை முதலியவைகளையும் அவர்கள் ஜீவித்திருக்கும்பொழுதே விசாரித்துச் சரித்திரமாகக் குறித்துவைப்பதில்லை. சரித்திரங்களைக் குறித்துவைக்காதிருப்பது பெரியதவறாகும். நம் முன்னோர்கள் இந்தவிஷயத்தில் தவறினார்களெனினும், இக்காலத்தில் நாமாவது தவறாமல் சரித்திரங்களைக் குறித்துவைக்கிறோமோ? நாமும் அப்படியே தவறிவருகிறோம். இது நன்மையாகாது. நமது தினசரி விருத்தாந்தங்களை யெழுதிவைக்கும் வழக்கத்தை நாம் அநுசரிக்கவேண்டும். இந்தத் தினசரிக் குறிப்புக்கள் பிற்காலத்திற் சரித்திரக்காரருக்கு மிக்க பயன்படும். நமது காலத்திலுள்ள பிரசித்த புருஷர்களைப்பற்றி விசாரித்து அவர்களுடைய ஜீவித சரித்திரத்தைக் குறித்துவைப்பது நமது கடமையாகும். இவ்விஷயத்திற் சோம்பலாக இருப்பதுகூடாது. கீர்த்திபெற்றவர்களுடைய நற்குணம், நற்பழக்கம், நற்செய்கை முதலியவற்றை இனிப்பிறக்கும் சிறுவர்கள் தெரிந்துகொள்வதற்கிடமிருந்தாலன்றி நம் தேசத்தவர்க்கு நன்னடக்கையும் தேசாபிமானமும் பிடிபடா. இப்பொழுது நாம் எழுதப்புகுந்த ராணிபவானியின் இளமைப்பருவத்து விஷயங்கள் நமக்குத்தெரியவரா. ஆயினும் அவளுடைய சரிதையும் ஸாஹஸமும் ஆச்சரியப்படத்தக்கனவாக இருக்கின்றமை

யின் அவளுடைய இளமைப்பருவம் இவ் வரியகுணங்கள் வளர்வதற்கு அனுகூலமாகவே இருந்திருக்கவேண்டுமென்று ஊகிக்கின்றோம்.

### பிறப்பும் வளர்ப்பும்

வங்காளதேசத்தில் ராஜசாயிமாகாணத்தில் சிதாம் என்னுங் கிராமத்தில் ஆத்மாராமச்சௌதரி என்னுமொரு கிருகஸ்தனிருந்தான். அவன்கல்வியிற் சிறந்தவனுமல்லன், தனகனவானுமல்லன். ஆனால், மனிதனுடைய யோக்கிதையும் கௌரவமும் நன்னடக்கையும் சீலமும் சிஷ்டாசாரமும் தெய்வபக்தியும் தேசபக்தியும், கல்வியினாலும் தனத்தினாலுமே அமைவனவல்லவாதலின், பெற்றோரின் புண்ணியவசத்தினாலும் அவருடைய நற்கருமப்பயனினாலும் அந்த ஆத்மாராமனுக்கு நற்குணங்களும் யோக்கிதையும் அமைந்திருந்தன. அவனுக்குப் பவானி என்னுமொரு பெண்மணியிருந்தனள். அவளை அவன் கிருகதருமத்திற் செவ்வனே பழக்கிச் சீலத்துடன் வளர்த்துவந்தான். சிறுவயதில் அவளுக்கு என்ன என்ன வித்தை கற்பித்தனரோ அவைகளை நாம் விவரித்துச்சொல்வதற்கிடமில்லையெனினும், பிற்காலத்து அவளிடத்து விளங்கிய சாமர்த்திய விசேஷங்களினாலும், புத்தித்திறமையினாலும், பெருங்குணங்களினாலும், அவளுக்கு இளமையிலேயே அவற்றிற்குவேண்டிய அங்குரங்களும் (முளைகளும்) சாதனங்களும் ஏற்பட்டிருக்குமென்று நினைக்கவேண்டியிருக்கிறது. அவளுடைய பிரகாசத்திற்கு முக்கியகாரணமாக இருந்த குணங்கள் மூன்றாகும். அவையாவன, தெய்வபக்தி, தருமபுத்தி, காரியநிர்வாகசக்தி என்பனவாம். இந் நற்குணங்களே அவளுக்குப் பெருங்கீர்த்தி விளைத்தன.

### விவாகம்

காமதேவனென்னும் பிராமணனுக்கு ரகுநந்தன், ராமஜீவன் என்னும் இருவர் குமாரர்கள் இருந்தார்கள். அவர்களிருவரும் தர்ப்பநாராயணனென்னும் சிறியஜமீன்தாரிடத்தில் உத்தியோகத்திலமர்ந்திருந்தனர். அவருடைய வக்கீலாக ரகுநந்தன் மூர்ஷிதாபாத் நவாபினுடைய தர்ப்பாரில் விவகரித்து வருநாளில் நவாபினுடைய நன்மதிப்புக்கும் நம்பிக்கைக்கும் உரியவனாயினான். அந்த நவாபினுடைய தயையினால் ரகுநந்தன் மூர்ஷிதாபாத்துக்குத் திவானாயினான்.

அம்மாத்திரமேயன்று; நவாப்பின் ஸம்ஸ்தானத்தில்ஸர்வாதிகாரமும் அவனுடைய கையிலேயே இருந்தது. அப்போது தன் தம்பியாகிய ராமஜீவனுக்கு இரண்டுகோடி ரூபா வரும்படியுள்ள ஜமீனை வாங்கிக்கொடுத்து "ராஜா" என்னும் பட்டமும் அந்த நவாப்பினிடத்திலிருந்து வாங்கிக்கொடுத்தான். இன்றைக்கும் அந்த வம்சத்தவருக்கு அந்தப்பட்டமிருக்கின்றது. ராஜாராமஜீவனுக்கு இருவர் குமாரர்களிருந்தனர். அவர்களுள் மூத்தவன் இளம்வயதிலேயே காலகதியடைந்தான். இளையோனாகிய ராமகாந்தன், தகப்பனார் பரகதியடைந்த பின்னர், நாட்டூர் என்னும் அவருடைய ராஜ்யத்திற்கு அதிபதியாக ராஜபதவியைப் பெற்றான். ஆத்மாராமச் சௌதரியின் குமாரியான பவானி என்பவள் ரூபலாவண்ணியத்திற் சிறந்தவளெனக்கேட்டு ராமகாந்தன் அவளை மணந்தான். அப்பொழுது அவனுக்கு வயது பதினெட்டு. பவானிக்கு வயது பதினைந்து. பாரியா பர்த்தாக்கள் இருவரும் மிக்க பிரேமானுராகங்களுடன் கூடிக்குலாவி வந்தார்கள்.

## இளங்கன்று பயமறியவில்லை

மிக்க புத்திக்கூர்மையுள்ள தயாராமன் என்பவன் ராஜா ராமஜீவனுடைய காலத்தில் மந்திரியாக இருந்தான். ராமஜீவன் அவனிடத்து மிக்க பிரேமை பாராட்டி அவனைத்தன் புதல்வனைப்போற் பராமரித்து வந்தான். ராமகாந்தனும் அந்த மந்திரியை "அண்ணா" என்று மரியாதையாகவும் அவனிடத்து விசுவாசமாகவும் நடந்துவந்தான். ஆயினும் அவனுக்கு யௌவனத்து மதமும் ராஜ்யாதிகாரமும் தனகர்வமும் (செல்வச்செருக்கும்) நேர்ந்தமையின் தன் தந்தையின் காலத்தில் ராஜ்யத்தை நடத்திவந்த பெரியோனிடத்து அவனுக்கு மதிப்புக் குறைந்தது. அப்படிப்பட்டவர்கள் இருப்பதனால் அவன் தன்னிஷ்டப்படி விவகரிப்பதற்குத் தடையாக இருந்தது,

"சிறியரே மதிக்கு மிந்தச் செல்வம்வந் துற்ற ஞான்றே
வறியபுன் செருக்கு மூடி வாயுள்ளோர் மூக ராவர்
பறியணி செவியு ளாரும் பயிறரு செவிட ராவர்
குறிபெறுங் கண்ணு ளாருங் குருடராய் முடிவ ரன்றே."

என்றபடி,

இளமையிற் கல்வியும் நல்லசிக்ஷையும் இல்லாதவர்களுக்கு மகத்தான செல்வமும் அதிகாரமும் கிடைத்தால் அவர்கள் செருக்கடையாதிருப்பரோ? யோக்கிதை யில்லாதவர்களுக்கு ராஜ்யத்தைக்கொடுப்பது குரங்கின் கையிற் பூமாலையைக் கொடுப்பதை யொக்கும்.

முறையிற் கற்ற மூதறி வானு
நிறையிற் கொண்ட நேர்மையி ஞனு
மெல்லா வுயிரு மிறைவன் படைப்பெனு
மொல்லு முணர்வை யுற்றிட லானு
நேர வருமொரு நீதியின் நிலையை
தேர்தர வறியாத் தீயவ ரிங்ஙன்
அதிகா ரத்துறை யடையவர் துறுதல்
மதிமை சாலா மகவுதன் காத்திற்
கொள்ளிரு புறத்துங் கூர்மை வாய்ந்த
வொள்ளிய வாளை யுற்றதை மானு
மவ்வா டன்கை யகப்படக் கொண்ட
செவ்விய சேய்க்குஞ் சேர்ந்தார் தமக்குந்
தீமை விளைக்குஞ் செய்கையை
தாமறி வாராற் றாணியுள்ளாரே.

குணசம்பத்தில்லாதவர்களுக்கு அதிகாரத்தைக் கொடுப்பது இருபுறமும் கூணையுள்ள கத்தியையுருவி இளம்பிள்ளையின் கையிற் கொடுப்பதை யொக்கும்; அஃதாவது, அதிகாரம் என்னுங்கத்தி அதனையுடையவர்களுக்கும் மற்றவர்களுக்கும் தீமை விளைக்குமென்பதாம். இப்பொழுது நாங்காணும் சிற்றரசர்கள் சிலர் இளங்குமரர்களாகச் சிறிதும் மனக்கவலையேனும் சரீரப்பிரயாசையேனுமின்றி,

"மாநிலக்கா வலனுவான் மன்னுயிர்காக் குங்கால
தானதனுக் கிடையூறு தன்னுற்றன் பரிஜனத்தா
லூனமிகு பகைத்திறத்தாற் கள்வரா லுயிர்தம்மா
லானபய மைந்துந்தீர்த் தறங்காப்பா னல்லனே."

என்னும் பொறுப்பைச் சிறிதுமுணராது சுதந்திரமும்ராஜ்யாதிகாரமும் பெற்றுச் செல்வச்செருக்கினல் மனோராஜ்யம் செய்யத்

தொடங்கி, யௌவனச் சேஷ்டையினுற் சிற்றின்ப வியாபாரங்களி லாழ்ந்தி, அதற்குவேண்டிய விடர்களையும் படர்களையும் கூட்டி அவர்களுடன் தங்காலத்தைக்கழித்து, ராஜ்யத்தின் சீரைக்குலைத்து, குடிகளின் க்ஷேமத்தைக்கெடுத்துத் தாமும் கடைசியில் துன்புறு கிறார்களல்லரோ.? இவ்வாருக ராமகாந்தனும் ரமாகாந்தனுகி (ஸ்திரீ லோலனுகி), தந்தையாரிட்ட கட்டளையைமீறி, மந்திரியாகிய தயா ராமனை அணுகாதகலவிட்டு, சுவேச்சாவிஹாரியாகி, ராஜ்யத்தைப் பாழாக்கினுன். தயாராமனென்னும் மந்திரி மனந்தளராது பல தடவை அவனுக்குப் புத்திமதிகூறியும் அவனுடைய சொற்கள் எருவாயின. அதைக்கண்டு தயாராமன் கடிந்து புத்திவாதமுரைக் கவே, அவ்வளவுகாலமாக இருந்த மந்திரியை ராமகாந்தன் வீட்டை விட்டுத் துரத்துவானுயினன். அப்படிப்பட்ட விபரீதபுத்தி வருவது நாசகாலத்திற்கே யன்றே? அன்னத்துவேஷமும் பிரம்மத்துவேஷ மும் அந்தியகாலத்திற்கேயல்லவோ? மூத்தோர் சொல்லை மீறிநடப் பதும் பெரியோரைப் பழிப்பதும் ஆபத்துக்கும் பாபத்துக்கும் முன் னுரையல்லவோ ? இங்ஙனம் துரத்தப்பட்ட தயாராமன் மூர்ஷி தாபாத்துக்குப் போய்ச்சேர்ந்தான்.

## ராஜ்யப்பிரஷ்டம்

தயாராமன் தன்னுடைய புத்திவிசேஷத்தினுல், மூர்ஷிதாபாத்து நவாப்பாகிய அலீவர்த்திகானுடைய நன்மதிப்பைப்பெற்று அவ னுக்கு ராமகாந்தனுடைய துர்நடவடிக்கைகளைப்பற்றிச்சொன்னுன். "நவாப்புஸம்ஸ்தானம்" என்பது விசாரணையின்றித் தீர்ப்புச்செய் வதற்குப் பழமொழியாக வழங்கும் பதமன்றே? எருது கன்று ஈன்றதென்றுல் 'கொட்டத்திற்கட்டு' என்று கட்டளையிடும் பிரபு வின் இயல்பறிந்து, நாட்டோர்ச் சம்ஸ்தானம் பாழடைந்துவருகிறதென் றும், நவாப்பின் திரவியமெல்லாம் வீண்போகிறதென்றும் சொல் லவே, உடனே நவாப்பு வெகுண்டு ஒரு சேனைப்பகுதியுடன் தயா ராமனையனுப்பி, ராமகாந்தனை யோட்டி அவனுடைய திரவியத்தை யெல்லாம் கைப்பற்றச் சொன்னுன். நவாப்பின் துரைத்தனத்தில் ஒருவன் ஒரு நிமிஷத்தில் லக்ஷாதிசனுகலாம்; மற்றொரு நிமிஷத் தில் பிக்ஷாதிசனுகலாம். அரசனும் அரவமும் ஒன்றுகும். அவ்

விருவரிடத்தும் வெகு ஜாக்கிரதையாக நடந்துகொள்ளவேண்டும். படைத்திரளோடு தயாராமன் ராமகாந்தனுடைய தனபாண்டாகாரத்திற் பிரவேசித்துத் தனத்தையெல்லாம் கொள்ளையாடினன். அந்தச் சமயத்தில் ராமகாந்தன் அந்தப்புரத்திலிருந்தான். நவாப்பின் சைன்னியம் பிரவேசித்த சங்கதியைக்கேட்டு, அதை எதிர்க்கச் சக்தியற்றவனாகி ராமகாந்தன் முன்பின் ஒன்றுந் தோன்றாமற் கட்டைபோலசையாமலிருந்தான்.

## பவானியின் பதிபக்தி

அப்படிப்பட்ட ஆபத்துக்காலத்தில் ராமகாந்தன் இன்னும் சிறிதுநேரம் சும்மா இருந்தால் சத்துருக்கள் அவனைச் சிறைப்படுத்தி விடுவார்கள். அந்த நிலைமையை யறிந்து பவானியானவள், பிரசங்காவதானமுள்ளவளானமையின் (அருஞ்சமயத்தில் அலையுறாமனம் வாய்ந்தவளாதலின்), கணவனது பயத்தையும் துக்கத்தையும் சாந்தப்படுத்தினள். எந்த விதத்திலாவது கணவனது இன்னுயிரைக் காப்பாற்றக் கங்கணங்கட்டினள். அதற்காக எத்தகைய கஷ்டத்தையும் மேற்கொள்ளச் சித்தமாயினள். தன்னாற்சுமக்கக்கூடிய அளவு நகைகளையும் நாணயங்களையும் எடுத்துக்கொண்டு கணவனுடன், எவருமறியாமல், பட்டினத்தைவிட்டு அப்புறமேகினள். அவள் இளமையிலிருந்து இன்னல் அநுபவியாத இந்திராணிபோன்றவள்; பல்லக்கைவிட்டுப் புவிமீது பாதம்வையாத பாக்கியசாலி. அந்தச் சீமாட்டிக்கு அவ்வளவு கஷ்டம் நேர்ந்தகாலத்தில் அவள் எட்டு மாசத்துக் கர்ப்பவதி. அவ்வளவு துக்கம் நேர்ந்தகாலத்தும் அவள் தன் பதியின் பிராணன் மீளுமென்னும் சந்தோஷத்தையே முக்கியமாகக்கொண்டு கால்நடையாகச் செல்லலுற்றாள்.

## விநயமும் விடாமுயற்சியும்

கணவனும் மனைவியும் இவ்விதமாக மிக்க பிரயாசையுடன் நடந்து பதுமாநதித்தீரமடைந்து, அங்கோர் ஓடக்காரனை நயந்துகொண்டு, நதியைக்கடந்து மூர்ஷிதாபாத்துப்போய்ச் சேர்ந்தார்கள். அவ்வூரில் எளியவர்களைப்போல இருவரும் ஒருசிறியவீட்டிற் குடியிருந்தார்கள். அந்தத் துரவஸ்தையில் பவானியின்பொறுமையும் தைரிய

மும் வியத்தற்பாலனவாயின. ராமகாந்தன் தன்னுடைய துராசாரங் களையும் அவற்றின் பயனாகவிளைந்த துர்க்கதியையும் நினைந்து பச்சாத் தாபப்படலுற்றான். தனது பாரியையின் குணத்தையும் புத்திக்கூர் மையையுங்கண்டு வியந்து, அவள்சொல்லியவண்ணம் நடக்கலுற்றான். பவானியானவள் சமயத்திற்குத் தக்கவாறு வேஷமும் வார்த்தைக ளும் மேற்கொண்டு, ஸாம, தான, பேத, தண்டம் என்னும் நான்குவித உபாயங்களுள் தானத்தைக் கைக்கொண்டு ஒழுகலாயி னள். சின்னாட்கெல்லாம், அவளுடைய தந்திரங்களினால் அவள் நவாப்பின் பொக்கிஷதாரனான ஜகத்ஸேட்டு என்பவனைத் தன் கணவனுக்கு மித்திரனாக்கினாள். அவள், தன்னிடத்திலிருந்த நகைகளுட் சிலவற்றை விற்று வந்தபணத்தை நவாப்பின் உத்தி யோகஸ்தர்களுக்குப் பரிதானங்கொடுத்து, அவர்களெல்லோரும் தன் கணவனுடைய பக்கமாகப் பரிந்துபேசும்படி செய்தாள். தமக்கு முதலில் மந்திரியாக இருந்து பிறகு தம்மை இந்தக்கதிக் குக் கொண்டுவந்த தயாராமனைவரவழைத்து, அவள் தன் கண வனை அவனுடைய காலில் வீழச்செய்து கணவன்செய்த தப்பிதங் களை யெல்லாம் மன்னிக்கும்படி அவனைக்கொண்டே வேண்டச்செய் தாள். அவ்வாறு வேண்டினதன்மீது தயாராமன் மனமிரங்கி, மறு படி ராமகாந்தனுக்கு எவ்விதத்திலாவது ராஜ்யாதிகாரம் வருமாறு செய்வதாகச் சபதம்பண்ணினான். பின்னர், பவானி தன்னிடமிருந்த நகைகளைவிற்று எழுபதினாயிரம் ரூபாசேர்த்து, அந்தப்பணத்தை யெல்லாம் தயாராமனுடைய மூலமாக நவாப்பின் முக்கிய உத்தியோ கஸ்தர்களுக்கு லஞ்சங்கொடுப்பித்து, அவர்களெல்லோரையும் தன் கணவனுடைய பக்ஷமாக்கினாள். இவ்விதமாக வசப்பட்ட உத்தி யோகஸ்தர்களும் தயாராமனும் ஜகத்ஸேட்டும் கூடி நவாப்பின் மனத்தைத்திருப்பி, மறுபடி ராமகாந்தனுக்கு ராஜ்யத்தைக் கொ டுப்பித்தார்கள்.

கையைவிட்டுப்போன ராஜ்யத்தை இவ்வாறு மறுபடி சம்பா திப்பதில் ராணிபவானி காட்டிய ஒப்பற்ற புத்தி கௌசலமும் பதி பக்தியும் ஆச்சரியப்படத்தக்கன. இப்படிப்பட்ட திரிசனங்களி ருக்க, "ஸ்திரீபுத்திঃ பிரளயங்கரீ" என்னும் வார்த்தை எல்லா

விடத்தும் சர்வசாமானியமாகச் செல்லுமோ ? மறுபடி ராஜ்யங் கிடைத்தபிறகு ராமகாந்தன் தனது வாலிபத்துத் துர்நடக்கைகளை விட்டொழித்து நற்சகவாசமும் நற்புத்தியும் மேற்கொண்டு தனது பாரியாமணியின் இதவசனங்களையும் மந்திரி புங்கவனுடைய புத்தி வாதங்களையுங் கைக்கொண்டு சுகமாகப் பத்தொன்பது வருஷகாலம் ராஜ்யபாரம் வகித்திருந்தான். அவன் இறந்துபோகும் காலத்திற் பவானிக்கு வயது முப்பத்தைந்து.

## மக்கட் பேறு

ராமகாந்தன் ராஜ்யத்தைப் போக்கடித்துக் கொண்டகாலத்திற் பவானி கர்ப்பவதியாக இருந்தனளல்லளே ? சின்னாட்கெல்லாம் அவளுக்கு ஒரு புத்திரனுண்டாயினன் ; பிறகு மற்றொரு குமாரனும் பிறந்தனன். ஆயினும் அந்தப்புத்திரர்களிருவரும் வாலிபத்திலேயே பரகதியடைந்தனர். பின்னர் அவளுக்குத் தாரை என்னுமொரு புத்திரிகாரத்தினம் மாத்திரமே பிறந்தனள். தாரையும் இளம்பருவத்தே விதந்துவானமையின் தாயினிடத்தே இருந்து வந்தாள்.

## ராணிபவானியின் துரைத்தனம்

பர்த்தா பரலோகமடைந்தபின்னர்ப் பவானியானவள் சிங்காதனமேறினள். ராஜ்யத்தை ஆளத்தக்க மக்கள் அவளுக்கு இலராயினர்; வேறு பந்துக்களும் இருந்திலர். அவள் தானே ராஜ்யபாரத்தை நிர்வகிக்கவேண்டிய அவசரம் நேர்ந்தது. பெரிய கஷ்டத்தை ஒருவன் அனுபவிக்கலாம் ; பெரிய விபத்துக்களுக்கும் ஈடுகொடுக்கலாம் ; ஆனால், பெரிய பொறுப்பை வகிப்பது அவைகளெல்லாவற்றையும்விடக் கஷ்டதரமானது. ராணி பவானிக்கு இந்த விஷயத்தில் முன் அனுபவமில்லை ; அதற்கேற்பப் பயிற்சியுமில்லை; படிப்பு இருந்ததோ இல்லையோ தெரியாது ; ராஜ்ய தந்திர நுட்பங்கள் பேரலைகளென அல்லற்படுத்தத்தக்கன ; அவள் போர்த் தொழிலுமறியாள். அவளுக்கு இருந்த அடங்காத தேசாபிமானமும் விடாப்பிடியுமே அவளுக்குத் துணையாக இருந்தன. அவையே சமயத்துக்கேற்ற தைரியமும் சாமர்த்தியமும் விளைவித்தன. நல்

லொழுக்கம் ஒன்றிருந்தாலும் அதனைப்பின்பற்றிப் பல நல்லொழுக்கங்கள் வந்து அமையுமன்றே?

> "ஒழுக்கம் விழுப்பந் தரலா லொழுக்க
> முயிரினு மோம்பப் படும்."

ஆதலினாலேயே "நன்மைகடைப்பிடி" என்று சொல்கின்றார்கள். நன்மையானதொரு குணத்தைக்கைக்கொண்டால் அது நல்லொழுக்கம் என்னும் ஏணியில் முதற்படியின்மீது கால்வைத்தது போலாகும்; அதற்கடுத்த படியின்மீது மற்றொருகால் தானாகவே செல்லும்; இவ்விதமாகச் சன்மார்க்கம்பிடிபடும், நற்குணங்கள் ஒவ்வொன்றாக வந்தெய்தும். அந்த நிலைமையில் வேறு சகாயமின்றி, ராணிபவானி சிங்காதனமேறவே, அவளுக்கு அந்தப் பதவிக்கு வேண்டிய தைரிய சௌரியங்களும் புத்தியும் வல்லமையும் தெய்வானுக்கிரகத்தினாற் பிராப்தியாயின.

அந்தச் சமயத்தில் வங்காளதேசத்துக்கு ஸுராஜத்தௌலா என்னும் துருக்கப்பிரபு நவாப்பாக இருந்தான். அவனுடைய அக்கிரமங்களும் அநீதியும் அகிலமெல்லாம் அறிந்தவிஷயங்களாகும். அவன் வியபிசாராதி துஷ்காரியங்களுக்காகத் தன் பொக்கிஷத்துப் பணத்தையெல்லாம் செலவிட்டுத் தன் அதிகாரத்திற்குட்பட்ட மண்டலாதிபதிகளிடத்திருந்து பலாத்காரமாகப் பணம் பறித்து வந்தான்; அப்படிப் பணங்கொடாதவர்களைப் பலவிதங்களில் வருத்தி வந்தான். பரஸ்திரீகளை அக்கிரமமாகச்சிறையெடுப்பதில் அந்தத் துஷ்டன் சற்றும் பின்வாங்காதவன்; நியாயமென்னு மொழி அவனுடைய ராஜ்யத்தில் ஔஷதத்திற்குக்கூட அகப்படாதிருந்தது. அப்படிப்பட்ட துஷ்டனால் தன்னுடைய ராஜ்யத்திற்கு எந்த நிமிஷத்திலாவது கெடுதி வருமெனக்கருதி, ராணிபவானியானவள் தன்னுடைய சைன்னியங்களைச் சரிப்படுத்திக்கொள்ள ஆரம்பித்தாள். போர்புரிவதற்கு அசக்தர்களாக இருந்த வீரர்களை நீக்கி, சமர்த்தர்களைச் சேர்த்துத் தானே சேனாதிபத்தியத்தை மேற்கொண்டு, படைவீரர்களைக்கொண்டு போலிச்சண்டைகள் செய்வித்துச் சேனைகளைப் பலப்படுத்தினாள். இங்ஙனம் முன்யோசனைகொண்டு அவள் செய்த

தனால் இனி விவரிக்கப்பெறும் கஷ்டத்தினின்று அவளுடைய ராஜ்யம் மீந்தது.

## துருக்கர்சேனையைத் துரத்தியடித்தாள்

ராணிபவானியின் இன்புதல்வியும் விதந்துவுமான தாரையென்பவள் வங்காளதேசத்துளெல்லாம் பிரசித்தமான சௌந்தரியவதியாவள். அவளுடைய வண்ணமேனியை வியந்துரைக்கக் கேட்டு நவாப்பானவன் அவளைச்சிறையெடுக்கவேண்டுமென்னும் துர்ப்புத்தி கொண்டவனாயினன். தாரையைத் தனக்கு அளிக்கவேண்டுமென்று அவன் ராணிபவானிக்கு ராயபாரம் (தூதுவர்த்தமானம்) அனுப்பினன். அதைக்கண்டு அவள் சீற்றமிகுந்து, வந்ததூதனை மிக்க அவமானப்படுத்தியனுப்பினாள். அதன்மீது நவாப்பு குரோதாவேசபரவசனாகி நாட்டோர் ஸம்ஸ்தானத்தையெல்லாம் பாழ்செய்து தாரையையும் பவானியையும் சிறைபிடித்துக்கொண்டு வருமாறு தன் சேனைகளை யனுப்பினன். இவ்விதமாக நடக்குமென முன்னரே ராணிபவானி யூகித்திருந்தமையின், அவள் பட்டினத்துவாயில்களை மூடுவித்து, தானே சேனாதிபத்தியத்தை வகித்துத் தன்சேனையுடன் ராஜதானியின் வெளிவாயிலண்டை நவாப்பின் சேனைகளை எதிர்க்கலுற்றாள். அவ்விடத்திற் கோரமானதொரு போர் நடந்தது. ராணிபவானியின் முன் நிற்கலாற்றாது துருக்கர்கள் பல திக்குக்களிலும் பறந்தோடினர்; அவர்களுட் சிலர் தமக்குற்ற அபஜயத்தையும் அவமானத்தையும் நவாப்புக்கு உரைக்கப்போயினர்.

## பெண்புத்தி பெரும்புத்தி.

இந்தச் சங்கதியையறிந்த ஏனைய சிற்றரசர்கள் நவாப்பின் சைன்னியங்களைக் கண்டவிடத்தெல்லாம் இம்ஸிக்கலாயினர். வங்கநாட்டு மண்டலாதிபதிகளுக்கெல்லாம் நவாப்பு மிக்க துஷ்டனென்பதும் கொடியனென்பதும் நீதிநியாய மற்றவனென்பதும் தெற்றெனவிளங்கலாயின. அவர்களனைவரும் ஒருங்குகூடி அவனுடைய ராஜ்யாதிகாரத்தைக் கவர்ந்துகொண்டு அவனைப் பிரஷ்டனாக ஓட்டக்கருதி ஜகத்ஸேட்டு என்பவரின் வீட்டில் ஒருநாள் சபைகூடினர். அந்தச் சபையை யலங்கரித்திருந்த கனவான்களுள் முக்

கியமானவர்கள் கிருஷ்ணுகர் ஸம்ஸ்தாஞதிபதியான ராஜா கிருஷ்ண சந்திரராயர், டெக்கா ஸம்ஸ்தாஞதிபதியான ராஜா ராஜபல்லவர், பாட்ஞவென்னும் மறுபெயருடன் வழங்கும் பாடலீபுரத்துச் சம்ஸ்தாஞதிபதியான ராஜா ராயதுர்லவர், நாட்டூர் ராஜ்யத்திற்கு அதிகாரிணியான ராணிபவானி ஆகிய இவர்களாவர். அந்தச் சபையில் நடந்த சம்பாஷணையின் விவரத்தைச் சரித்திரக்காரரொருவர் எழுதியவாறு இங்குக் குறிப்போம். அதைக்கவனிக்குமிடத்து, பெரும்புத்தி, பெருந்தகைமை, பெரியயோசனை, ஊக்கம், அபிமானம் முதலியன பெண்பாலாரிடத்து விசேஷமாகப் பிரகாசிக்கின்றனவென்பது விளங்கும். ஆண்மக்களுக்கும் பெண்மக்களுக்கும் உள்ள வித்தியாசம் இத்தன்மையது, பெண்மக்களே மேற்சொல்லிய குணங்களில் விசேஷித்தவர்கள் என்னும் உண்மையை யுணர்த்துமாறே ஜகத்ஸேட்டின் கிருகத்தில் அந்த மன்னர் மண்டலம் கூடியது போலும்.

ஜகத்ஸேட்டு:—ஸ-ராஜத் தௌலாவை நீக்கிவிட்டு அவனுடைய சேஞதிபதியான மீர்ஜாபரை நவாப்பாக்கலாம். அவன் சிற்றரசர்களுக்கும் குடிகளுக்கும் இதமாகநடந்துகொள்வதாகச் சொல்கிறன்.

ராணிபவானி:—வங்காளதேசத்துச் சிங்காதனத்தின்மீது துருக்கனை வைக்காமல் இந்து அரசர்களையே வைக்கக்கூடாதா? இழந்த சுதந்திரத்தை மறுபடி சம்பாதித்துக் கொள்வதற்கு யோக்கியமான சமயம் இதுவேயென்று நினைக்கிறேன்.

ராஜா கிருஷ்ண சந்திரர்:—ராணியவர்கள் சொல்லிய வார்த்தை வெகு யோக்கியமானதே. ஸ்வாதந்தரியம் அனைவருக்கும் பிரியமானதே. ஆனல் நாம் அறுநூறு ஆண்டுகளாகப் பரதந்திரர்களாக இருக்கிறேம். நமது கீர்த்தி நஷ்டமாகி இருக்கின்றது. பராஷ்டிரங்களை யொழித்து நம்மை நாமே ரக்ஷித்துக்கொள்வதற்கு நாம் திறமையற்றிருக்கிறேம். நம்முள் ஒற்றுமையில்லை; பரஸ்பர துவேஷங்கள் அநேகம் இருக்கின்றன. ஆதலின், இந்து நவாப்பை ஏற்படுத்துமிடத்து, நம்முள் நாம் கலகித்து ஒருவரையொருவர் கொல்வதே ஏற்

படும். இப்படியிருக்கும் நமது உட்கலகங்களைக்கண்டு மகாராஷ்டிரர் நம்மீது தண்டெடுத்துவந்து நம்மை மறுபடி பாதந்திரர்களாக்குவர். அவர்களை நாம் அறியமாட்டோம். ஆகையால் இது வரையிலிருக் கிற துருக்கரே, உத்தமராவர்.

ராணிபவானி:— ராஜ்யாரூடனானபிறகு (சிங்காதனமேறிய பிறகு) மீர்ஜாபரும் சுராஜத்தௌலாவைப்போலக் குரூரத்துவம் வகி த்தால் நாம் செய்வதென்னை ?

ராஜாராஜபல்லவர்:—அந்த விஷயத்தைப்பற்றி இதுவரையி லேயே ஆலோசித்திருக்கிறோம். மீர்ஜாபரை நம் வசத்தில் வைத்துக் கொள்வதற்கு ஆங்கிலேயரைத் துணையாகக்கொள்ள நினைத்தோம்; அவர்கள் மிக்க பலவான்கள்; கேவலம் வர்த்தகர்கள்; ராஜ்யம் செய்யவேண்டுமென்னும் எண்ணம் அவர்களுக்கு உண்டாகாது; வர்த்தகத்தில் விசேஷ லாபமுண்டாகுமாறு சிலநிபந்தனைகளை அவர் களுக்கு எழுதிக்கொடுக்கும் பக்ஷத்தில் அவர்கள் நமக்கு எப்பொழு தும் துணையாக இருப்பார்கள். அவர்களுடைய சகாயம் நமக்கிருந் தால் நவாப்பு நமக்கு அடங்கியே இருப்பான்.

ஜகத்ஸேட்டு:—இதுவுமன்றிக் கல்கத்தா நகரத்திலுள்ள கம் பெனியாருடைய கிட்டங்கியைச் சுராஜத்தௌலா கொளுத்திச் சுட் டிருக்கிறான். ஆகையால் அவர்கள் அவனை ஓட்டுவதற்கு முயல்கி றார்கள் புதிதாகவரும் நவாப்பு அவர்களுக்குச் சினேகமாக இருப் பின், அவர்கள் அனுகூலமாக நடந்துகொள்வார்கள். அவர்களோடு சினேக மில்லையெனின், புதியநவாப்பு வந்தவுடன் அவர்களோடு சண்டை செய்யவேண்டி வரும்.

(இன்னும் வரும்)

சாதுசேவகன்.

# ஆசார விளக்கம்

முற்காலத்தில் மதசம்பந்தமான நிபந்தனைகளும் சுகாதாரவிதிகளும் ஒன்றாகவேபிணைக்கப்பெற்றிருந்தன. மனிதனுடைய லௌகிக வைதிக காரியங்களை ஒழுங்குபடுத்துவதற்கே தர்மசாஸ்திரங்கள் ஏற்பட்டன. வைதிக ஆசாரத்தையும் ஆரோக்கியத்திற்கு ஏதுவான ஆசாரத்தையும் வேறு வேறாக்காததனால், தர்மசாஸ்திரத்திற் கூறிய விதிநிஷேதங்களை யனுசரித்து நடப்பவனுக்கு "சாஸ்திராயசஸௌகாயச" என வைதிகானுஷ்டானப்பயனும் தேகாரோக்கியப் பிராப்தியும் உண்டாம் என்பது சித்தாந்தமாக வழங்கலாயிற்று. இஃது அனைவருக்கும் தெரிந்த விஷயமே. அக்காலத்து ஜனசமூகத்தில் ஒவ்வொரு தொழிலும் ஒவ்வொரு ஜாதியாருக்கு ஒப்புவிக்கப்பட்டிருந்த ஒழுங்கின்படி, கல்வித்துறையில் உழைத்து உட்புகுந்து ஆராய்ச்சி செய்து அறிவுமிகுவதும், அதனை மற்றவர்களுக்கு எடுத்துரைப்பதும் ஆசாரியர்களாக விளங்கியவர்களுக்கே அமைந்திருந்தது; ஆதலின் ரோககாரகம் (நோயுண்டாக்குங் காரணம்) ரோக நிவாரணம் (நோயைத்தடுத்தல், போக்கல்) முதலியனவாகிய இவ் விஷயங்களை யறிந்து சொல்லக்கூடியவர்கள் அந்த ஆசாரியர்களே ஆயினர். இதனாற்றான் கிறிஸ்தவர்களுடைய பூர்வமீமாம்ஸை எனத்தகும் ஓல்ட்டெஸ்டமெண்டில் ஸ்பஷ்டமான சுகாதார விதிகள் பல தோன்றலுற்றன. மகம்மதிய வேதமாகிய கொரானிலும் மற்றுமுள்ள துருக்க ஐதிகங்களிலும் அவ்வண்ணமே ஆரோக்கிய விதிகள் அமையப்பெற்றன. மேற்கூறியவாறு முன்னர் இந்தியாவில் ஆரோக்கிய சாஸ்திரவிதிநிஷேதங்கள் பிரிக்கவொண்ணாதவிதமாக நித்திய நைமித்திக வைதிக ஆசாரங்களோடு இயைந்து வழங்கின. இந்த ஆசாரானுஷ்டானக்கிரமத்தை யனுசரித்து ஜனங்கள் வெவ்வேறு வகுப்பினராயினர்; இந்த நிபந்தனையின் விசேஷத்தினாலும் ஆசாரியர்களது அதிகாரத்தை நிலைநிறுத்தக்கருதிச் செய்த சட்டதிட்டங்களினாலும் மகத்தான வர்ணாச்சிரமக்கட்டுப்பாடு ஏற்பட்டது.

இவ்வாறு ஆரோக்கியப்பிராப்திக்கென அமைக்கப்பட்ட அரசாட்சியிற் சட்டதிட்டங்கள் பிரஜைகள் ஒவ்வொருவரையும் தனித்தனியே (வியஷ்டியில்) குறித்து நிற்றலும், பிரஜாசமூகத்தைப் பொதுவில் (ஸமஷ்டியில்) குறியாதிருத்தலும் அவசியமாமன்றோ? ஒவ்வொருவரும் தத்தம் ஆசாரங்களினுல் ஆரோக்கியமடையவேண்டியவராவர். ஒவ்வொருவரும் ஆரோக்கியத்தை நாடிநடிக்கின் நாடெங்கும் ஆரோக்கியம் குடிகொள்ளாதோ? செடிகள் ஒவ்வொன்றையும் பாதுகாத்துவரின் தோட்டத்தைப் பாதுகாத்ததுபோலாயிற்றன்றோ? ஆனதுபற்றியே பூர்வத்து ஆரியாது கிரந்தங்களில் நகரத்துச் சுகாதாரத்திற்குரிய பொதுவிதி வழக்குக்கள் (நமது முனிசிபல் ஏற்பாடுகள் போல்வன) அரியனவாயின; ஆயினும், அவை ஆங்காங்குக் காணப்படுதலின் அப்படிப்பட்ட கட்டுப்பாடுகளும் இருந்தனவென்பது திண்ணம். இக்காலத்துச் சுகாதார சாஸ்திரங்களில் நன்மையெனக்கூறும் ஒவ்வொரு விஷயத்திற்கும் தக்க காரணம் எடுத்துக்காட்டுவது அவசியமாக இருக்கின்றது. இதனுல் கிரந்தம் விரிவுறுகின்றது. நாம் அனுஷ்டிக்கவேண்டிய விதி யாது? ஆசரியாது ஒழிக்கவேண்டிய நிஷேதம் யாது? என்னும் சித்தாந்தத்தைக்கொண்டு தெளியுமுன் நிரம்பப் படிக்கவேண்டும். காரணகாரிய வாதசம்பந்தமான விஷயங்களை அகற்றி நமக்கு வேண்டிய சாராம்சத்தைக் கைக்கொள்ளவேண்டும். ஆரியதர்ம சாஸ்திரக்காரர்களோவெனின், விவரங்களை ஒழித்து முக்கியமான விஷயங்களை மாத்திரம் சூத்திரங்களைப்போலச் சுருங்கச்சொல்லிப் போந்தனர்.

சுத்தம், அசுத்தம், சுத்தீகரித்தல் ஆகிய இவைகளின் உண்மையான தத்துவங்களைத் தெளிவாகக் கண்டறிந்து அவற்றிற்குரியவிதிவகைகளை மாத்திரம் கைக்கொண்டு எளிதிற் சாதித்தனர். மேற்கூறிய மூன்று விஷயங்களுமே சுகாதார சாஸ்திரத்திற்கு மூலமான அமிசங்களாகும். ஐம்பது வருஷத்திற்குமுன்னர் நமக்கிருந்த சுகாதார சாஸ்திரப்பயிற்சியைக்கொண்டு பார்க்கின், அந்தச் சாஸ்திரத்தில் முதன்மையான அமிசங்களாகச் சுத்தம், அசுத்தம், சுத்தீகரிப்பு என்னும் மூன்றையுங்கொள்வது யுக்தமெனவும் நியாயமெனவும்

மேற்றிசையாருக்குத் தோன்றுதென்று நினைக்கிறேன்; ஆனால் அவ்விசப் பாகுபாடு சுலபமானதாகவும் தெளிவானதாகவும் இருக்கிறதென்றும் சாதாரண ஜனங்கள் அறிந்துகொள்ளத் தக்கதென்றும் மேற்றிசைச் சாஸ்திரிகள் ஒப்புக்கொள்வார்கள். நமது அசாக்கிரதையினால் ஜலம், ரத்தம் முதலியவைகளில் அதிநுட்பமான அங்கக் கட்டுள்ள ஜீவகோடிகள் உற்பத்தியாகி அவற்றை விஷமாக்குகின்றன என்னும் கொள்கை மேம்பட்டிருக்கும் இக்காலத்திலோவெனின், சுத்தம், அசுத்தம், சுத்தீகரிப்பு என்னும் மூவகைப் பிரிவினையினுஞ் சிறந்தவிதமாகப் பகிர்ந்து சுகாதார சாஸ்திரமெழுதுவது இயலாதென்பது எனது துணிபு; சுத்தாசுத்தங்கள் எனப்படுவன ரோகஜனகமாவுள்ள நுட்பப் பிராணிகளைப் பொறுத்தனவாகும்; சுத்தீகரிப்பு என்பது நோயுண்டாக்கும் நுட்பப்பிராணிகளை நசிக்கச்செய்யும் விதமும், விஷத்தை முறிக்கும் மாற்றுமுறைகளுமடங்கியதாகும்; சுருங்கச் சொல்லின், சுத்தமாக இருப்பவைகளை அங்ஙனே காப்பாற்றுவதற்கும், அசுத்தம் இன்னதென்று அறிந்துகொள்வதற்கும், அசுத்தயானதைச் சுத்தப்படுத்துவதற்குமே விதிகள் ஏற்படுத்தலாகும். பூர்வத்து ஆரியர் அநுஷ்டித்து வந்த சுத்தீகரண முறைகளைக் கவனிக்குமிடத்து, அவை, விசித்திரமான யந்திரசாதனங்களைக்கொண்டுநிலக்கரியிலிருந் தெடுக்கப்பட்ட வஸ்துக்களுக்காக மாதந்தோறும் லக்ஷக்கணக்காய்ப் பணத்தைச் செலவிடக்கூடிய செல்வமிகுந்த முனிசிபாலிடிகளுக்காக ஏற்பட்டனவல்ல; அங்ஙனமன்றி, ஆடம்பரமின்றி அனுயாசமாக விவசாயத் தொழில் செய்தும், அல்லாது அவிபாலவிருத்தி (ஆயர்தொழில்) மேற்கொண்டு நாட்டில் ஆங்காங்குச்சிதறுண்டுகாலங்கழித்து வந்தவர்களுக்கென அவ்விதிகள் ஏற்பட்டனவாகும்; இக்காலத்திற் காணப்படுவதுபோல ஜனத்தொகைமிகுந்த நகரத்துப் பிரஜைகளைக் குறித்து அந்த சுத்தீகரணவிதிகள் ஏற்படவில்லையென்பது திண்ணம், ஆகலின், அவர்களுடைய முறைகள்பெரும்பாலும் நாம் தினந்தோறும் உபயோகிக்கத்தக்கவைகளேயாம்; செயற்கைச் சாதனங்களை நாடாமல் அவர்கள் இயற்கைவகையில் தாதுபஞ்சீகாணத்தினாலும் (ரஸாயன சம்பந்தமான சத்துக்கள் ஒன்றோடொன்று கலப்பதனாலும்) சூக்ஷ்மமான பிராணிவர்க்கத்தின் காரியத்தினாலும்

உண்டாகத்தக்கமாறுபாடுகளுக்கேற்ற சுபாவதர்மங்களையே (இயற்கைவிதிகளையே) கைப்பற்றினர்.

மேற்சொல்லிய சித்தாந்தங்களுக்கு உதாரணமாக, இரைக்குடலைக் காப்பாற்றிக்கொள்ளும் பொருட்டு ஆரியர்கள் ஏற்படுத்தியுள்ள சாஸ்திரவிதிகளைக் கவனிப்போம். பகலிற்செய்யும் வேலைகளின் சந்தர்ப்ப வசத்தினால் நமது தேகத்திலும் ஆடையிலும் ஒட்டிக்கொண்டிருக்கக்கூடிய நோய்விளைக்கும் நுண்ணிய பிராணிகோடிகளைக் களையக்கருதி நாம் தினந்தோறும் உடம்பைத் தேய்த்துக் குளிக்கவேண்டும்; உணவு புசிக்கும்போது பரிசுத்தமான மடியாடை தரிக்கவேண்டுமென்று அவர்கள் ஏற்படுத்திய பொதுவிதிகள் ஒருவாறிருக்க, நாம் அன்னமெடுத்துப் புசிக்கும் கை நகங்களின் சந்துகளிற் பிணி பயக்கும் பராபிண்டாதிகள் வந்தடையாதிருக்குமாறு ஒரு விதி ஏற்படுத்தியுள்ளார்:—"நகங்களினால் மண்ணைக் கிள்ளலாகாது; மிருத்பிண்டங்களைக் கீறலாகாது. புல்லைக்கிழிக்கலாகாது. மண்ணைக்கிள்ளுகிறவன், நகத்தைக் கடிக்கிறவன் நரகமடைவான்" இந்த விதியை மீறி நடக்கிறவனுக்குத் தண்டனை நரகப்பிராப்தியென்று மிகவும் சுருக்கமாகச் சொல்லிவிட்டார்கள். இது ராஜதண்டனையினும் மிகச் சூழுக்குற்றது; மனத்திற் றிகிலுண்டாக்கத்தக்கது. மரணத்திற்குப்பின்பும் ஜீவயாத்திரை இருக்கிறதென்றும் மறுபிறப்பு உண்டென்றும் போதிக்கும் ஆரியமதத்தின் கொள்கை மனத்தில் நன்றாகக் குடிகொண்டவர்கள் நரகப்பிராப்தியைக் கடுந்தண்டனையெனவேமதிப்பரல்லரே.

இத்தேசத்தில் வழக்கமாகவுள்ள பிரக்ஷாளன, தாவன, ஸ்நான (கைகால்கழுவுதல், பல்விளக்குதல், உடம்புகுளித்தல்) முறைகளைக் கவனிக்குமிடத்து, நகத்தைக்கடிக்கும் வழக்கமுண்டாயின் அதனாற் பராபிண்டாதி சம்பர்க்கதோஷத்திற்குள்ளாகிப் பீடிக்கப்படுவோம் என்பது நன்கு விளங்குகின்றது. "ஆங்கிலோஸ்தோமம்" என்று ஆங்கிலக்கலைஞர் சொல்லும் குடற்புழு நம்மிடத்துக் குடிகொண்டு பிரபலித்துப் பீடியாதிருக்கும்பொருட்டே மண்ணையும் புல்லையும் நகத்தினாற் கீறலாகாதென்னும் விதியேற்படுத்தினரென்று தோன்றுகிறது. குடற்புழுவென்னும் இந்த நுண்ணிய கிருமிஜாலம் இத்

தேசத்தில் எங்கும் அபரிமிதமாக இருக்கின்றது. சென்னபட்டணத்துக்குடிகளுள் அரைவாசிக்கதிகமாயினோரும், மற்ற இடங்களிலுள்ளவர்களுள் முக்கால்வாசிப்பேரும் இந்தப்புழுவினாற் பீடிக்கப்பட்டிருக்கிறார்களென்று காப்டன் வில்லியம்ஸ் என்னும் இந்திய மருத்துவ நிபுணர் சோதித்தறிந்து வெளியிட்டுள்ளார். இந்தப் புழுவானது மணிக்குடலைச் சார்ந்து அட்டையைப்போல விடாதுபற்றி இரத்தத்தை உறிஞ்சுகின்றது. இப்புழுக்கள் அதிகரிக்குமிடத்து நித்திராணியும் (பலவீனமும்) ரத்தசோஷையினால் விளையும் பலவகை நோய்களும் பிராப்தமாகின்றன.

இந்தப் புழுவின் அண்டங்கள் மனிதருடைய மணிக்குடலினின்று வெளியேறினபிறகு கீடாவஸ்தையில் (மயிர்க்குட்டிக்குஞ்சுகளாக) தரையில் தங்கி இருக்கின்றன; இதினின்று மறுபடி அந்தக் குடற்புழு பிறந்து பெருகுகின்றது. ஆகையாற்றான், பெரும்பாலும் விவசாயத்தொழிலில் அமர்ந்திருப்பவரான இந்தியர்கள் நகத்தைக் கடிக்கக்கூடாதென்றும் தரையைக் கீறக்கூடாதென்றும் விதித்தது ஆரோக்கியத்திற்கு இன்றியமையாததாகும். உண்பண்டங்களின் சுசியைப்பற்றிச் சொல்லுமிடத்து "சாஸ்திரமறிந்தவரால் நிஷேதிக்கப்பட்ட (தள்ளப்பட்ட) பதார்த்தம் எதையும் புசிக்கலாகாது" என விதித்துள்ளார். இஃது இக்காலத்து ஆரோக்கியாதிகாரியின் கடமையையே எடுத்துச்சொல்லியதாகும். பதார்த்தங்களைப் பழுதாக்கும் கலப்புக்கள் ஆகாவெனத் தெளிவாக நிந்தித்து ஒதுக்கியிருக்கிறார்கள். ஸ்பரிசத்தினால் வியாதியைப் பரவச்செய்யத்தக்க தூஷியமான வஸ்துக்களோடு சம்பந்தப்பட்ட ஈ எறும்பு முதலியவைகள் திறந்துவைத்திருக்கும் ஆறின உணவுப்பதார்த்தங்களின்மீது வந்து மொய்ப்பதனால் விஷபேதி, அஸ்திஜ்வரம், மஹாமாரியென்னுங் கொள்ளைநோய் ஆகிய வியாதிகளை யுண்டுபண்ணத்தக்க கீடங்கள் அவற்றில் அமருமென்பது இப்பொழுது எல்லார்க்குந் தெரிந்த விஷயம்.

அல்லாது, அப்படிப்பட்ட அணுப்பிராணிகள் தூசியோடு கலந்து கிடக்கும்; அவை நன்றாகக் காயாதிருக்கின் நசியாமற் பிராணதாதுவுடன் கிடக்கும்; ஈரங்கண்டவிடத்து உயிர்த்தெழுந்து பரவும்;

இம்மாதிரியான பரபிண்டாதிகள் திறந்துகிடக்கும் ஆறின உணவிற் படியலாம். ஆகையால், அன்னமிடும்பொழுது அஃது அதிக உஷ்ணமாக இருக்கவேண்டுமென்று கிருகஸ்தருக்கு விதியேற்பட்டிருக்கிறது; மிகவும் உஷ்ணமாக இருக்கின் பரபிண்டாதிகள் நசித்துப்போம் என்பது கருத்து; ஜீரணானுகூலத்தின் பொருட்டு, உண்பவர் மௌனமாகப் புசிக்கவேண்டும் (மௌநேநபோக்தவ்யம்) என்று விதிக்கப்பட்டிருக்கிறது. இஃது ஐரோப்பிய போஜனசாலையில் வழக்கமாகச் சொல்லப்படும் விதியேயாம். "புளித்துப்போன தின்பண்டங்களையும், ஓரிரவுமுழுமையும் வைத்திருந்து பழமைப்பட்டபதார்த்தங்களையும், மற்றொருவருடைய உச்சிஷ்டத்தையும் புசிக்கக்கூடாதென்று விதித்தது பரபிண்டங்கள் சேராமலும் குடல்களில் உபத்திரவங்கள் உண்டாகாமலும் காக்கும்பொருட்டேயாகும். குடியிருக்கும் வீடுகளில் அடிக்கடிவரும் பறவைகளின் மூக்குகளும் கால்களும் நோயுண்டாக்கத்தக்க அணுக்களுள்ள அசுத்தமான பதார்த்தங்களில் தோய்க்கப்பட்டிருக்கலாம்; அதுபோலவே மனிதருடைய பாதங்களும் அசுத்தங்களை மிதித்திருக்கலாம்; அவைகள் ஆகாராதிகளிற் படுவதினால் தீங்கு நேரிடும்; ஆதலின், உண்பண்டங்களில் மனிதருடைய பாதமாவது பறவைகளின் காலாவது மூக்காவது பட்டால் அப் பண்டங்களை உபயோகிக்கக் கூடாதென்றும் விதியேற்பட்டிருக்கிறது.

ஜலத்தைச் சாக்கிரதையாகச் சேகரித்து அதனை ஆரோக்கியானுகூலமாகக் காப்பாற்றவேண்டுமென்பதை ஆரியர் நன்கறிந்துள்ளார். இக் காலத்து ஆரோக்கியசாஸ்திர வித்தியார்த்திகளுக்கு நீரின் தன்மையை அதற்குள்ள பிரகிருதி சம்பந்தத்தைக்கொண்டு உணர்த்துவதுபோல ஆரியரும் சுத்தஜலத்தின் லக்ஷணத்தை அதன் பிரகிருதி சம்பந்தத்தினாலேயே விளக்கினர். அவர்கள் கூறியபடி சுத்த ஜல லக்ஷணமாவது அது சரியான வாசனையும் வர்ணமும் ருசியும் பொருந்தியிருக்கவேண்டும். ஜலத்தைச் சுத்தமான பிரதேசத்திலிருந்து எடுக்கவேண்டுமென்று கூறியது சுகாதாரத்திற்கு முக்கியமானதாகும். பூமியின் மேற்பரப்பிலுள்ள நீர் நிலையிலிருந்து நாம் நீர் எடுத்துக்கொள்ளும் பிரதேச முழுவதும் மிச்ச பரிசுத்தமானதாக

இருக்கவேண்டியது அவசியமென்பதை மேற்குறித்த ஜலலக்ஷண விதி உணர்த்துகின்றது. இதனால், ஜனங்கள் வசிக்கும் பிரதேசத்தி லுள்ள நீர்நிலையிலிருந்து ஜலமெடுத்துக்கொள்ளக் கூடாதென்பது சித்தாந்தமாயிற்று.

இந்த விதியை யனுசரியாததனால் இத்தேசத்தில் அனேக பட்ட ணங்களிலும் கிராமங்களிலும் விஷபேதி, வயிற்றுக்கடுப்பு, அதிசார பேதி, (சிலவிடங்களில்) அஸ்திஜ்வரம் ஆகிய இவ் வியாதிகளுக்கு இரையாகி அனேகர் மாண்டுபோகின்றனர். இக்காலத்து சுகாதார சாஸ்திரிகள் இவ்விதியின் உண்மையை நன்கு கைக்கொண்டுள்ளார். ஐரோப்பா கண்டத்திலுள்ள முனிசிபாலிட்டியார் (ஆரிய தர்மசாஸ் திரத்திற் சொல்லியவாறு) "சுசிப்பிரதேசத்திலிருந்து நீரெடு"த்தற் பொருட்டு லக்ஷக்கணக்காகப் பணத்தைச் செலவிடுகின்றனர். சுத்த ஜலத்தை யெடுத்துவந்தபிறகு அதனைச் சுசிக்குறைவின்றிக் காப் பாற்றும் வழிகாட்டுவது அவசியமன்றோ? இவ் விஷயத்தில், உயர் குலத்தோரும் கல்வியிற் சிறந்தோரும் உபயோகிக்கத்தக்க ஜலத்தை யும் ஜலபாத்திரத்தையும் தாழ்ந்த ஜாதியாரும் கல்விப்பயிற்சியிற் குறைந்த கீழ்மக்களும் தொடக்கூடாதென்னும் ஜாதிக்கட்டுப்பாட்டி னால் தற்செயலாகப் பரபிண்டாதிசம்சர்க்கம் பெரும்பாலும் உண் டாகாதிருக்க வகையேற்பட்டதென்பது நிச்சயம். ஆயினும் பொது வான ஜலாசயங்களின் விஷயத்தில் முனிசிபல் சட்டம் போன்ற தொரு விதி அவசியமேயன்றோ? ஆகையாற்றான், நதிக்கரைகளி லும் நீரிலும் ஜலமலங் கழிக்கக்கூடாதெனத் தடுத்தனர். நதிக்கு அருகில் மலோபாதி தீர்த்துக்கொள்ளவேண்டிவரின் இந்த விதி யை யனுசரித்து நடக்கும் ஜாக்கிரதையுள்ள ஆரியனானவன் நீர் நிலைக்குச்சிறிது தூரத்தில் தனியாக ஒரு பள்ளம் தோண்டிக்கொள் ளவேண்டும். இப்படிச் செய்வதனால் மழைஜலம் வழிந்தோடி அந்த அசுத்தத்தை நதியிற் கொண்டுபோய்ச் சேர்க்காது. இன்னும் நதிக் கரைகளை நன்றாகப்பாதுகாக்கும் பொருட்டேபோலும், அவை பரிசுத்த ஸ்தலங்களெனவும், அங்குப் பிதிர்களுக்குக் கிருத்தியங் கள் செய்யலாமெனவும் மதித்துக்கூறியிருக்கின்றார்கள். "மூத்திரம், மலம், எச்சில், அழுக்காடைகள் வேறுவித அசுத்தங்கள், இரத்தம்

விஷபதார்த்தங்கள் ஆகிய இவைகளைத் தண்ணீரிற் போடக்கூடாது" என்னும் விதியைவிட ஜலத்தைச் சுசியாக வைப்பதற்கான ஏற்பாடு வேறொன்று உளதோ?

இக்காலத்தில் இந்துக்கள் மேற்சொல்லிய தர்மசாஸ்திரவிதிகளை ஆசரியாதிருப்பதைக்கண்டு ஆரோக்கியாதிகாரிகள் மிக்க வெறுப்புறுகிறார்கள். இந்துக்களுக்கு நேரும் தேகோபத்திரவங்கள், சாவு, ஆரோக்கிய ஐசுவரியக்குறைவு முதலியன பெரும்பான்மையும் மேற்சொல்லிய சுகாதாரவிதிகளை அவர்கள் அனுசரித்து நடவாததனாலேயே விளைகின்றனவென்று நான் சொல்லவும் வேண்டுமோ?

(இன்னும் வரும்)

கர்னல், உ. ஜி. கிங்கு, சி. ஐ. இ., ஐ. எம். எஸ்.,
சானிடரி கமிஷனர்.

---

# வானசாஸ்திரம்

ஆகாயம் என்பதென்ன? பரந்த அச் சமுத்திரத்திற்குக் கங்கு கரையில்லையா? அளக்கொணு தாழ்ந்த அப்பாதாளத்திற்கு அடிகிடையாதா? என ஓர் ஆங்கில வானசாஸ்திரி தாமெழுதிய வானசாஸ்திரத்திற்கு அடிப்படையாகக்கொண்டு வானசாஸ்திரத்தை விளங்கும்படியாக எழுதிச் செல்லுகின்றனர். சாதாரணமாக நாம், அதிகமங்கலும், அதிகப்பிரகாசமும் இல்லாத நாளிரவின் முற்காலத்திலோ பிற்காலத்திலோ ஆகாயத்தை நிமிர்ந்துபார்ப்போமாயின், வெள்ளையுஞ் சற்றுச் செவந்தநிறமும் உள்ள ஒளிப்பொருள்கள்; பல ஒளியிலும், உருவத்திலும் வேற்றுமையுடையனவாயும், சில சலனப்படுவனவாயும், சில அப்படிக்கின்றி ஒரே மாதிரியாகச் சலனமின்றியும் தோன்றக் காண்கின்றோம். அவைகள்யா? யாரால் அங்கு ஏற்படுத்தப்பட்டன? பிரயோஜனமின்றி விதைக்கப்பட்டனவா? அவையெங்குச்செல்கின்றன. அவைகளின் கதி என்ன? என்ற பற்பல வினாக்களெழுகின்றன. அவற்றிற்கு விடையிறுப்பது அவசியமன்

றோ. இவற்றினைக் கூறும் சாத்திரமான வானசாத்திரம் நமக்கு கிடைத்திராதாயின் நாம் உழல வேண்டியதா யிருக்குமென்பதிற் றடையில்லை.

இதினின்றும் மானிடப்பிறவி எத்தகைத்து என ஊகித்துப் பாருங்கள்.

"தொல்லைநம் பிறவி யெண்ணிற் றொடுகடன் மணலு மாற்றா வெல்லைய," எனச் சிந்தாமணியிற்கூறியபடி நம் வாழ்நாள் அற்பமே யாயினும் அதனை எவ்வளவு விசேஷமான காரியங்களில் உபயோகப் படுத்துகின்றோம். மேலேகூறிய, ஆகாயத்திற்றோன்றும் ஒளிப் பொருள்களைக் கண்டுசொல்வோரைத்தான் வானசாஸ்திரிகளென்கி றோம். இப்படி எத்தனையோ தலைமுறையாக இவ் வானசாத்திரத் தை உற்றுநோக்கி வந்திருக்கின்றனர். நமது பூர்விகர்கள் வெகு காலமாக வானசாத்திரத்தைப் பயிற்சிசெய்து வந்ததுண்டு. மேனா ட்டிலிருந்து வானசாத்திரம் இந் நாட்டுக்கு வந்ததாகச் சிலரது அபிப் பிராயம். இப்பொழுது சென்னை இராஜதானிக்கு "கோ ஆப்ரேட் டிவ் கிரெடிட் சங்கங்களின் ரிஜிஸ்டிராரான மிஸ்டர் திவான்பகதூர் ட. ர. சுவாமிக்கண்ணுப்பிள்ளையவர்கள் M. A., B. L., LLB. (LOND) சென்னையில் இவ்வருஷம் மார்ச்சுமீ 26, 27, 28-உ களில் நடந்த தென்னிந்திய சங்கத்தாரது வருஷோற்சவத்தின்போது தாஞ்செய்த பிரசங்கத்தில் இந்தியரது சித்தாந்தமே விசேஷமுடையதென்றும், அதனால் யாதொரு தவறுதலும்; இப்போது மேனாட்டார் கையாண்டு வரும் முறைக்கு ஏற்படாதென்றும் வெகு விரிவாகப்பேசி நிரூபணஞ் செய்தார்கள்.

ஆசியாக்கண்டத்தின் மேற்பாகத்தில் ஓடும் யூபரெட்டஸ் நதிக் கரையிலுள்ள கால்டே (Chaldai) ஜாதியாராகிய இடையர்கள் இவ் வானசாத்திரத்தை முதன்முதல் கண்டுபிடித்தனரென்பது மேனாட் டாரது கொள்கை. அவர்கள் ஆடுமாடுமேய்க்குமிடம் மலை, காடு, செடிகளின்றி வெறும் வெட்டவெளியாகவிருந்தது; அவர்களும் வேறுதொழிலில்லாமையால் வானத்தைப் பார்த்தவண்ணமாயிருந்து காலக்கிரமத்தில் இதனை அறிய இடமுண்டாயிற்றென்கின்றனர். அப்படியுமிருக்கலாம். இதைப்பற்றி 'Dravidian Astronomy

and its affinity with the Chaldean திராவிடவானசாத்திரமும் கால்டேயர்களது சரித்திரத்திேைடொற்றுமையாம்' என ஒரு வியாசம் சோதிடநூலில் வல்லவரான டாக்டர் V. V. இராமணசாஸ்திரிகள் M.A.PHD. F.Z.S. (LON) etc. etc. அவர்களால் எழுதித் தமிழர் தோன்மையாராய்ச்சிச்சங்கத்தாரால், அவர்களது பத்தாவது இலக்கம் புத்தகரூபமாய் வெளியிடப்போவதாக அறிக்கையிட்டிருக்கின்றனர். அதனை வெளிவந்தபிறகு ஆராய்வோம்.

நாம் மேலேகூறியபடி மாசுமப்பில்லா நாளிரவில் ஆகாயத்தைப் பார்ப்போமாயின் மனத்திற்கு எவ்வளவு ரம்மியமாயிருப்பதென்பது பிறர்சொல்லத் தெரிவதல்ல. அதனிலும் மழைபெய்ந்துவிட்ட பிறகு ஆகாயமும் நிர்மலமாயிருக்குமாயின் அப்பொழுதுண்டாகும் ஆநந்தம் அளவிடற்கரியது. ஆயினும் ஒரு சிறுபொழுதுதான் இந்நிகழ்ச்சியுண்டாகின்றது. சற்றுநேரத்திற்கெல்லாம் இவைகளின் கதியென்ன? இவை எப்படிச் சஞ்சரிக்கின்றன? என்ற கருத்து முற்படுகிறது.

முதலிற் பார்க்கும்போது ஆகாயவலயத்தில் நக்ஷத்திரங்கள் நிரந்தரமாயிருப்பதாகக் காணப்படுகிறது. உற்றுநோக்கும்போது ஒரு வெண்மையானபட்டையொன்று ஆகாயத்திற்கே துகிலுடுத்தது போற்றோன்றுகிறது. க்ஷீரவலயம் (Milky way) என்கிற அதனிருபுறங்களையும் உற்றுநோக்குவோமாயின் அநேக தாராகணங்கள் கூடியிருக்கக் காணுவோம். இப்படி ஒரு வெள்ளையாகத் தோற்றுவதே சிறுசிறு நக்ஷத்திரங்களாம். இவற்றை தூரதிருஷ்டிக்கண்ணாடி கொண்டு ஆராய்வோமாயின் நன்குபுலப்படும். இந்த ஆனி அல்லது ஜூன், ஜூலை மாதங்களில் நடுநிசியில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கிச் சென்று பிறகு கிழக்கே செல்லக்காணலாம். இந்தக் கணங்கள் எவ்வளவுதூரம் பரந்திருக்கின்றன? அதன் பரிமாணம் என்ன? என்ற கேள்விகளுக்குப் பதிலளிக்க முயலும்போது நாஞ்சற்றுத் தடுமாறுகிறோம். நாம் இதைப்பற்றிப் பின்னால் விரிவாய்ப்பேசுவோமாகையால், இதனை இங்கு விவகரிக்காது நிறுத்திக்கொண்டு பொதுவாக, நமது கண்களுக்குப் புலப்படும் சூரியனும் இந்த க்ஷீரவலயத்திலொரு நக்ஷத்திரந்தானென்போம். அநேகருக்கு இஃது அதிசயமாகத் தோற்றக்கூடும்.

நாம் ஆகாயத்தை யுற்றுநோக்குவோமாயின் அநேக ஒளியுள்ள நக்ஷத்திரங்கள் சேர்ந்து இந்த க்ஷீரவலயத்தினின்று பிரத்தியேகமாயும், தூரத்திலுந் தோன்றக்காண்போம். இப்படி அநேகமிருக்கின்றன. இவற்றிற்கு வெண்மேகக் கூட்டங்கள் Nebulæ என்பர்.

கண்டுபிடித்தற்கரிய இவ் வாகாயத்தில் தூரதிருஷ்டிகொண்டு பார்க்குங்கால் தோன்றுபவை இன்னும்பல! விசித்திரமானதும், பரந்ததும் அடிமுடியற்றதுமானவிது நமது கண்களுக்கே அநேக கோடி சூரியர்களாகப் பிரகாசிக்கின்றது. அஃது எவ்வாறு அமைந்திருக்கிறதென அறிய, நாம் மேலே யோசிப்பதைத் தவிர்த்து நமக்குச் சமீபத்திலிருப்பவைகளைக்கொண்டு ஆராயவேண்டும். இவைகளிற் சூரியன் மத்தியமானது. இந்த ஒளியும் உஷ்ணமும் கூடிய பிரதேசத்தைச் சுற்றி அநேக கிரகங்கள்—சில உபக்கிரகங்களுடன் கூடியதாயுஞ் சஞ்சரிக்கின்றன. அவைகளுக்கு இயற்கையாய் ஒளியிருப்பதாக ஏற்படவில்லை. சூரியனது ஒளியைப்பெற்று, அதனது பிரபை இப்பூமியிலும் ஆகாயத்திலுங்காணப்படுகிறது. நமது பூமியும் தூரத்திலிருந்து பார்க்கப்படுமாயின் அப்படியே காணப்படும். இவ்வகைப் பொருள்களையெல்லாஞ் சேர்த்து நடத்துவதற்குச் சௌரகணம் (Solar System) எனப்படும். பொதுவாக நக்ஷத்திர மண்டலம் (Sidereal Universe) என்பது எல்லாவற்றினையுங்கவரக் கூடியதாயினும் நம்மை யடுத்திருப்பதைப்பற்றிப் பேசுவதே நமது முதற்கடமை. இவ் விரண்டு கொள்கைகளாலுண்டாகும் பிரயோஜனங்கள் யாவெனின் நக்ஷத்திரங்கள் மாறுவதாகப்புலப்படுவதில்லை. அவைகளிருக்குமிடம் அதிகத்தூரமாயிருப்பதாலும், அவை சாதாரணமாக இருந்தவிடத்திலேயே இராமல் சஞ்சரிப்பதுண்மையேயாயினும், அவை கண்களுக்குப் புலப்படாமையான் ஸ்திரநக்ஷத்திரங்கள் (Fixed Stars) எனப்பெயர்பெற்றன. நமக்கு அதாவது பூமிக்குச் சமீபத்திலிருப்பதாலும் பூமியைவிடக் கதி அதிகமுடையதாலும், இவற்றிற்குச் சலனராசிகள் அல்லது கிரகங்கள் (Rotation) எனப் பெயரமைந்தது.

இப்பொழுது நாம் ஆகாயத்தைப்பார்க்கும்போது நக்ஷத்திரங்களும் கிரகங்களும் நாங்கண்ட இடம்விட்டுச் செல்லக்காண்கிறோம்.

நாமும் இருந்தவிடத்தைவிட்டுத் தூரஞ்சென்று மறுபடி பார்ப்போமா னால் அவைகளை வேறு இடங்களிற் காண்கிறோம். அதனால் அவைகள் சஞ்சாரஞ் செய்வதோடு நமது பூமியுஞ் சஞ்சரிக்கின்றதென்பது விக சிதமாம். முற்காலத்தில் இப்படிப்பூமி சஞ்சரிப்பது தெரியாது. சூரி யன்சஞ்சரிப்பதாகக்கொண்டு கணக்கிட்டு வந்ததாற்றான் கொஞ்சம் இடையூறுகள் தோன்றின. ஆயினும் மேனாட்டாரைப்போல் நாங் திண்டாடாது, நமது பூர்விகர்கள் செவ்வனே யாராய்ந்துபார்த்து வேண்டியகாரியங்களைச் செய்து வைத்திருப்பதால் நமது விதிகள் விசேஷமானவையென்று கொண்டாடப்படுகின்றன.

ஒவ்வொரு கிரகங்களையும்பற்றி வியவகரிக்கும்போது என் னென்ன அற்புதங்கள் காணப்படுகின்றனவென்பது வெளிப்படும். ஒவ்வொன்றுந் தன்னைத்தானே பிரமணம் (Rotation) செய்துகொ ள்ளுவதுமன்றி, மற்றைக்கிரகங்களைச் சுற்றிப் பரிவர்த்தனஞ் செய்வ தும் (Revolution), அவைகளின் நித்தியகதியும், பரிமாணமும், சீதோஷ்ண நிலைகளுங் கூடியவரையிற் சொல்லப்படும். இவை மேனா ட்டுச் சாத்திரங்களையும், இந்து வானசாஸ்திரங்களையுங்கொண்டு ஒற் றுமையாகச் சொல்லப்படுவதோடு பிரத்தியக்ஷமாக ஆகாயத்தில் தோன்றுவதையும் உடன் கூறப்படும். இவைகள் இப்படியாயினும், இவைகளைச்செலுத்தும் கதி எல்லாவற்றிற்கும் ஒருமாதிரியான தேயாம்.

சாதாரணமாக, ஒருவர் ஒருமத்தியஸ்தலத்தில் நிற்பதாக வைத் துக்கொள்வோம். அவருக்கு ஒளிபொருந்திய வஸ்து ஒன்று வர வர அவரிடம் வருவதாகவும், உரு பெரியதாகத் தோற்றுவதாக வுங் காணப்படும். அது தன்னைச்சுற்றிப்பிரமணஞ் செய்வதால் அப் படித்தோற்றுகிறது; அது செகண்டு ஒன்றுக்கு ஒன்பது மைல் செல்லுகிறது. அல்லது ஒரு விகடிகைக்கு ஒரு மைல் வீதஞ்செல்லு கிறது. இதேமாதிரி குரு (வியாழன்) ஓடுகிறது. இதைவிடப் பெரிய தான சூரியன் தனது ஆகர்ஷண சக்தியால் இழுத்துக்கொள்ளா விடில் அதுபோகுமிடந்தெரியாது. இப்படி ஒவ்வொன்றும் நம்முன் வரக்காண்போம். காலமாத்திரம் பற்றாததாயிருக்கும். இவைகளை யெடுத்துக் காட்டும் சாஸ்திரத்தின் பெருமையளவிடற்கரியதன்றோ.

(தொடரும்).

இலக்கணவிளக்க பரம்பரை,

திருவாரூர், சோமசுந்தரதேசிகன்.

---

334



# புத்தகக் குறிப்பு

விவேக சந்திரிகை முதற்பாகம்:—இஃது, ஆரியா பத்திராதிபர் ஸ்ரீமத்-தி. அ. ஸ்வாமிநாதையரவர்களால் இயற்றப்பெற்றது. நல்லொழுக்கங்களிற் சிறந்த பற்பல நெறிகளைச் சிறுவர்கள் எளிதிற் கற்றுணருமாறு சிறிய கதைகளைக்காட்டி எளிய நடையில் எழுதி அச்சிடப்பெற்றிருக்கிறது. நந்தமிழ்நாட்டுச் சிறுவர்களுக்கு இத்தகைய புத்தகங்கள் பாடமாகக் கற்பிக்கப்பெறுமாயின் அவர் அறிவொழுக்கங்களால் நல்வழிப்படுவதற் கேதுவாகும்.

'மோஹமுத்கரம்' என்னும் பஜகோவிந்த ஸ்தோத்ரம்:— இதுவும் ஆரியாபத்திராதிபர் ஸ்ரீமத்-தி.அ. ஸ்வாமிநாதையரவர்களால் மொழிபெயர்க்கப் பெற்றது. இது ஸ்ரீமத்-சங்கராசார்ய ஸ்வாமிகளால் வடமொழியிற்செய்யப்பட்ட சுலோகங்களுக்குத் தமிழிற் பொழிப்புரையெழுதி அப்பொருளைப் பற்பலதமிழ்நூல்மேற்கோள்கொண்டு உபந்நியாச ரூபமாகச் செவ்விய நடையில் விரித்தெழுதப்பெற்றிருப்பதுடன் ஆசாரியஸ்வாமிகளின் சிஷ்யர்களாற்செய்யப்பெற்ற சதுர்த்தச மஞ்சரிக்கும் உரையெழுதிச் சேர்க்கப்பெற்றிருக்கிறது; மோகாதிகளை யொழித்து உபசாந்தி யடைதற்குரிய உபதேசங்களடங்கியது.

'அக்ஞாதவாசம்' அல்லது மாண்டவன் மீண்டமாயம் என்னும் நாவல்:— ஸ்ரீமத்-ஆர். எஸ். நாராயணசாமி ஐயர் பி. ஏ., பி. எல்., அவர்களாலியற்றப் பெற்றது. இதை ஆங்காங்குப் படித்துப்பார்த்ததில் நவீன உலகவழக்க நடையைத்தழுவித் தற்கால நிகழ்ச்சியிலுள்ள உலகவிவகாரங்களுக் கிணங்கப் புத்திசாதுரியந்தோன்ற எழுதப்பெற்றிருப்பதாகத்தெரிகிறது. இதன் விலை அணா 8.

ஸ்ரீ வான்மீகி ராமாயண சருக்கார்த்த சங்கிரகம்:— இஃது, அரியக்குடி ஸ்ரீமாந்-சா. கி. அரங்கநாதச் செட்டியாரவர்களால் வடமொழிவான்மீகத்திலுள்ள ஒவ்வொரு சருக்கத்திலுஞ் சொல்லப்படுங் கதைகளைச் சுருக்கிச் சாந்தரஸமுள்ள ஒவ்வொரு செய்யுளிலடக்கி 539 செய்யுளாகப் பாடப்பெற்றிருக்கிறது. இதற்குப் பல வித்வா

ன்களாற் கொடுக்கப்பெற்ற சிறப்புப்பாயிரத்தால் இதன் நயங்கள் விளங்கும். இதன் விலை அணா 8.

திருசியா திருசிய விசார சங்கிரக வினாவிடை:— இது ஸ்ரீமத்-வேதாந்த சிதாகாசசுவாமிகளா லியற்றப்பெற்றது. அத்வைத முறையில் வேதாந்தவிசாரம் செய்யத்தொடங்குபவர்களுக்கு மிகவும் பயன்படும். திருசியாதிருசிய பதார்த்த விசாரங்களைச் சிறுவருமுணரும்படி எளியநடையில் வினாவும் விடையுமாக எழுதி முடிக்கப்பெற்றிருக்கிறது.

ஆரியருடைய சங்கீதசாஸ்திரத்தின் சரித்திர சங்கிரகம்:—இது கோயமுத்தூர் சுதேச தர்மரக்ஷணி ஸபையின் காரியதரிசியும், கலாநிதிப்பத்திராசிரியருமான சேலம் ஸ்ரீமத்- பகடால. நரசிம்மலுநாயடு அவர்களாலியற்றப்பட்டது. இது பழமையான ஆரிய சங்கீத முறைகளைப் பற்பல மேற்கோள்களுடன் தெளிவான தமிழ் நடையில் எழுதி முடிக்கப்பெற்றிருக்கிறது. இதன் விலை அணா 4.

மாறன் வருக்கக்கோவை:—இது திருக்குருகூர் மாறனென்னும் நம்மாழ்வார் மீது, கற்போர் நெஞ்சங் காமுறும் வண்ணஞ் சொன்னயம் பொருணயந் தொடைநயம் பொருந்த, அகப்பொருட்டுறையுள், முக்கியமாகிய சில துறைகளையமைத்தியற்றப்பெற்றது. இதுகாறு மித்தகையநூ லிரண்டொன்றே வெளிவந்துளது. இவ்வரிய நூலியற்றிய புலவர் பெருமானது பெயர், ஜாதி முதலியன தெற்றெனப் புலப்படவில்லை. இத்தகைய நூலைத் தமிழர்க்குப்பயன்படுமாறு பரிசோதித்து அச்சிட்டுதவிய ஸ்ரீமத்—அப்பு, சடகோப ராமாநுஜாசாரியர் இன்னும் இத்தகைய நூல்களைப்பரிசோதித்தச்சிடு மூக்கமுடையராக வேண்டுகின்றேன்.

கண்ணகி கதை:—இஃது அஞ்சொ னுண்டேர்ச்சிச் செஞ்சொற் புலவர் பெருமானாகிய, இளங்கோவடிகளாற் செய்யப்பெற்ற சிலப்பதிகாரமென்னும் காவிய கதையைப் பாலருமெளிதிலுணருமாறு வசனரூபமாகச் சொற்சுவை பொருட்சுவை தோன்றச் சுருக்கிச் சுன்னாகம் ஸ்ரீமத்-அ. குமாரசாமிப்புலவரவர்களா லியற்றப்பெற்றது. பிள்ளையவர்கள், இதுபோன்ற அரும்பெருங் காவியங்களையெல்லாம் வசனரூபமாகவெழுதி யுதவுவர்களேல், தமிழ் மக்கட்கினிது பயன்படுமென்பதெமதுதுணிபு.

ப-ர்.

336

உ

# மதுரைத் தமிழ்ச்சங்கம்.

## இச்சங்கத்தார் 1911௵ ஏப்ரல்மீ௳த்தில் நடாத்திய பி.ஏ., மெற்றிக் ஆங்கிலகலாசாலைத்தமிழ்ப்பரீக்ஷையிற் றேறிப் பரிசும் யோக்கியதா பத்திரமும் பெறும் மாணுக்கர்களின் விவரம்.

---

### பி. ஏ. பரீக்ஷை.

#### 1-வது வகுப்பு.

1. 4. B. தாவுத்ஷா, பிரசிடென்ஸி காலேஜ், சென்னை.
(முதற்பரிசு ரூ 50 பெறத்தக்க தங்கப்பதக்கம்)

2. 5. K. சுப்பிரமணியபிள்ளை, ஷை ஷை.
(இரண்டாவது பரிசு ரூ 45)

3. 3. S. நரசிம்மன், பச்சையப்பன்காலேஜ், சென்னை.
(மூன்றுவது பரிசு ரூ 40)

---

#### II-வது வகுப்பு

1. 2. N. C. ஸ்ரீநிவாஸாச்சாரி, பச்சையப்பன் காலேஜ், சென்னை.

2. 1. P. B. முனிசாமி செட்டி, ஷை ஷை

---

### மெற்றிக்குலேஷன் or ஸ்கூல் பைனல் பரீட்சை.

#### 1-வது வகுப்பு.

1. 41. S. இரங்கநாத முதலி, முனிசிபல் காலேஜ், சேலம்.
1-வது பரிசு ரூ 30. (வெள்ளிப்பதக்கமும் மீத ரூபாவும்.)

2. 40. K. வெங்கடசுப்பன், ஷை ஷை

(இரண்டாவது பரிசு ரூ. 25.)

---

## II-வது வகுப்பு.

1. 195. N. பாலசுந்தரம், பச்சையப்பமுதலியார் ஹைஸ்கூல், காஞ்சீபுரம்.
2. 62. P. குப்புசாமி, அர்ச்சூசையப்பர் கலாசாலை, கூடலூர்.
3. 42. W. V. கோவிந்தசாமி, போர்டுசெகிண்டரி ஸ்கூல், உடுமலைப்பேட்டை.
4. 119. K. உலகநாதன், ஹிந்துஹைஸ்கூல், ஸ்ரீவில்லிபுத்தூர்.
5. 66. S. திருநாவுக்கரசு, அர்ச்சூசையப்பர் கலாசாலை, கூடலூர்.
6. 55. V. வெங்கடநாராயணன், லண்டன்மிஷன் பாடசாலை, கோயம்புத்தூர்.
7. 43. K. A. பழனியப்பன், போர்டுசெகிண்டரி ஸ்கூல், உடுமலைப்பேட்டை.
8. 147. M. A. ஸ்ரீநிவாஸன், வெஸ்லிகாலேஜ், இராயப்பேட்டை.
9. 177. A. சிவராமசுவாமி, வெஸ்லியன்மிஷன் ஹைஸ்கூல், நாகப்பட்டணம்.
10. 24. V. சவரிமுத்து, செண்ட் பிரான்சிஸ் சேவியர்ஸ் ஹைஸ்கூல், பாளையங்கோட்டை.
11. 60. A. நீலகண்டன், அர்ச்சூசையப்பர் கலாசாலை, கூடலூர்.
12. 127. K. வீரராகவன், வூர்ஹிஸ் காலேஜ், வேலூர்.
13. 71. V. இராமசுவாமி, மகாராஜாஸ் காலேஜ், புதுக்கோட்டை.
14. 96. P. சுப்பிரமணியன், கல்யாணசுந்தரம் ஹைஸ்கூல், தஞ்சாவூர்.
15. 191. P. N. வரதாசாரி, பச்சையப்பன் ஹைஸ்கூல், காஞ்சீபுரம்.
16. 182. R. விசுவநாதன், பிண்டிலே காலேஜ், மன்னார்குடி.
17. 58. C. S. சூரியநாராயண சர்மா, அர்ச் சூசையப்பர் கலா சாலை, கூடலூர்.

18. 73. R. இராமஸ்வாமி ஐயங்கார், போர்டு ஹைஸ்கூல், திருவாரூர்.

19. 187. V. S. இராமசாமி, பிண்டிலே காலேஜ், மன்னார்குடி.

20. 137. S. நடேசன், ஸ்ரீ மஹந்து தேவஸ்தானம் ஹிந்து ஹைஸ்கூல், வேலூர்.

21. 149. N. C. சக்ரவர்த்தி, முத்தியாலுப்பேட்டை ஹைஸ்கூல், சென்னை.

22. 121. S. சித்திரபுத்திரன், ஹிந்து ஹைஸ்கூல், ஸ்ரீவில்லிபுத்தூர்.

23. 50. N. கோவிந்தசாமி, செயின்ட்மிக்கல்ஸ் ஹைஸ்கூல், கோயம்புத்தூர்.

24. 188. K. கிருஷ்ணமாசாரி, (U. F. C. M.) யுனைடட் ப்ரீ சர்ச் மிஷன் ஹைஸ்கூல், காஞ்சிபுரம்.

25. 161. K. N. பஞ்சாபகேசன், முனிசிபல் ஹைஸ்கூல், மாயவரம்.

26. 19. E. முத்துசுவாமி, சென்ட் பிரான்சிஸ்சேவியர்ஸ் ஹைஸ்கூல், பாளையங்கோட்டை.

27. 136. S. அப்பாக்குட்டி முதலியார், ஸ்ரீ மஹந்து ஹிந்து ஹைஸ்கூல், வேலூர்.

28. 194. K. V. கணபதி, பச்சையப்பன் கலாசாலை, காஞ்சிபுரம்.

29. 38. C. பிள்ளையார், ஹயர் கிரேட் சகிண்டரிஸ்கூல், கோட்டாறு.

30. 67. R. பாலசுப்பிரமணியன், மஹாராஜாஸ் காலேஜ், புதுக்கோட்டை.

31. 99. T. S. ரெங்கநாதன், கல்யாணசுந்தரம் ஹைஸ்கூல், தஞ்சாவூர்.

32. 7. V. இராமஸ்வாமி, ஸேதுபதி ஹைஸ்கூல், மதுரை.

33. 31. Y. A. இராஜமணி, ஸ்காட் கிறிஸ்டியன் காலேஜ், நாகர்கோவில்.

34. 83. N. இராமலிங்கம், சென்ட்பீடர்ஸ் ஹைஸ்கூல், தஞ்சாவூர்.

35. 146. V. M. செல்வராயன், வெஸ்லிகாலேஜ், இராயப்பேட்டை.